பக்கங்கள்:- பத்து

Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா. 6.00

உலகெங்குமுள்ள உங்கள் உறவினர்களுடன்
INTER NET மூலம்
குறைந்த கட்டணத்தில்
தொடர்புகொள்ள
இலங்கை முழுவதும் 24 மணிநேரத்தில் துரித
தபால்/பொதிகள் சேவை
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
303, K.K.S. ROAD, JAFFNA
T.P : 021-2222670, 2223588
FAX: 2223214
Email-del-smskr@eureka.lk

# வலம்புரி
The Valampuri

சங்கு 04 | வள்ளுவர் ஆண்டு 2034 | ஆனி 15 | ஞாயிற்றுக்கிழமை (29.06.2003) | தொலைபேசி - 2223378 | ஒலி 192

## புலிகளின் கப்பல் தாக்கி அழிப்பு

# புரிந்துணர்வு ஒப்பந்தத்தை கடற்படையினர் மீறவில்லை!

## விசாரணை முடிவில் கண்காணிப்புக்குழு அறிவிப்பு

(நமது நிருபர்)

**முல்லைத்தீவு கடற் பிரதேசத்தில் விடுதலைப்புலிகளின் கப்பல் தாக்கி அழிக்கப்பட்ட சம்பவத்தில் இலங்கைக் கடற்படையினர் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை மீறவில்லை. எதிர்காலத்தில் கடற்பரப்பில் மோதல்கள் இடம்பெறுவதைத் தடுப்பதற்கு இலங்கை அரசும், தமிழீழ விடுதலைப்புலிகளும் கூடிய விரைவில் ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொள்ள வேண்டும். இவ்வாறு யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளது.**

இம் மாதம் 14ம் திகதி முல்லைத்தீவு கடற்பரப்பில் விடுதலைப்புலிகளின் கப்பல் ஒன்று இலங்கைக் கடற்படையினரால் தாக்கி அழிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக விசாரணை மேற்கொண்ட யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகளின் கப்பல் தாக்கி அழிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு விடுதலைப்புலிகளின் கடற்படை அணியினரிடமும் இலங்கைக் கடற்படையினரிடமும் விரிவாக விசாரணைகளை மேற்கொண்ட பின் தனது அறிக்கையை விடுதலைப்புலிகளிடமும், அரசாங்கத்திடமும் நேற்று கையளித்தது.

அந்த விசாரணை அறிக்கையில் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு

(10ம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் ஜயலத் இன்று யாழ். வருகை

(யாழ்ப்பாணம்)

புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனா இன்று யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளார்.

யாழ். குடாநாட்டில் மீளக் குடியேறியுள்ள முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளையும் அவர்களது தேவைகளையும் நேரடியாகக் கேட்டறிந்து கொள்ளவே அமைச்சர் யாழ். வருவதாக முஸ்லிம் மக்கள் பணிமனையின் அலுவலகச் செயலாளர் எம். ஏ.சி. ஜஷ்பர் தெரிவித்துள்ளார்.

(இ)

## நயினை நாகபூசணி அம்மன் ஆலய கொடியேற்றம் இன்று



## மொறட்டுவவில் சுற்றிவளைப்பு 616 பேர் கைதாகினர்

(கொழும்பு)

மொறட்டுவப் பகுதியில் நேற்று அதிகாலை பொலிஸார் பாரிய சுற்றிவளைப்புத தேடுதலில் ஈடுபட்டனர்.

பெருந்திரளான பொலிஸார் அதிகாலை 1மணி முதல் 4 மணிவரை வீடுகள் மற்றும் விடுதிகள் எங்கும் துருவித் துருவி சோதனை இட்டனர்.

இதன் போது 616 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 39பேர் மேலதிக விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

தெஹிவளை, கல்கிசை, இரத்மலானை ஆகிய பகுதிகளிலும் தேடுதல்கள் முடுக்கிவிடப்பட்டிருந்தன.

(10ம் பக்கம் பார்க்க)

## தொடரப்போகும் பேச்சுகளில்

# முஸ்லிம்கள் தனித்தரப்பாக பங்குபற்ற அனுமதிக்க வேண்டும்

## அமைச்சர் ஹக்கீம் வேண்டுகோள்

(கொழும்பு)

வடக்குக் கிழக்கிற்கான இடைக்கால நிர்வாகம் அமைக்கப்படும் போது, அதில் முஸ்லிம் மக்களின் நலன்களும் உறுதிப்படுத்தப்பட வேண்டுமென்று, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீம் அரசாங்கத்தித்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இவ்விடயம் குறித்து கட்சிச் செயலகம் நேற்று விடுத்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

இனப்பிரச்சினையால் பாதிக்கப்பட்டுள்ள முஸ்லிம் மக்களின் நியாயமான அரசியல் அபிலாசைகள் நிறைவேற்றப்படும் போது யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவருவதில் சிக்கல்கள் ஏற்படுமென்று, அரசாங்கமும் சர்வதேச சமூகமும் கருதுகிறது.

இதனால் முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வை முன்வைக்கும் நடவடிக்கைகளை அரசாங்கம் பிற்போட்டு வருவதுடன், வெறும் முகாமைத்துவ நடவடிக்கைகளில் மாத்திரமே கவனம் செலுத்தி வருவதை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உன்னிப்பாக அவதானித்து வருகிறது.

இந் நிலையில் இடைக்கால

(10ம் பக்கம் பார்க்க)

## ஸ்ரீ.சு.கட்சி - ஜே.வி.பி கூட்டு ஜூலை 8ல் கைச்சாத்து

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பிக்குக்குமிடையிலான கூட்டமைப்பு ஒப்பந்தம் ஜூலை மாதம் 8ம் திகதி கைச்சாத்திடப்படவுள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தலைமையில் நேற்றுமுன்தினம் இரவு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களும் ஜே.வி.பியின் முக்கியஸ்தர்களும் சந்தித்துப் பேசியுள்ளனர்.

சுமார் 4மணி நேரம் வரை இடம்பெற்ற இச் சந்திப்பின் போது கூட்டமைப்பின் பதிவு, கூட்டமைப்பின் சின்னம் தொடர்பான இறுதியான முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(10ம் பக்கம் பார்க்க)

# தாக்குதல்களை எதிர்கொள்ள முப்படையினரும் தயார் நிலையில்

## பாதுகாப்பு அமைச்சர் மாரப்பன

(கொழும்பு)

நாட்டின் எப்பகுதியிலும், எந்தவொரு அராஜக நிலை ஏற்பட்டாலும் அதனைச் சமாளிக்கும் வகையில் முப்படையினரும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகப் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன தெரிவித்துள்ளார்.

ஜாஎலப் பகுதியில் நேற்று நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், ஐக்கிய தேசிய முன்னணி அரசு தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இணைந்து சமாதான முயற்சிகளில் ஈடுபட்டு வரும் இவ்வேளையில் அத்தகைய சமாதான முயற்சிகளைக் குழப்பும் வகையில் ஒரு சாரார் முயன்று வருகின்றனர்.

அண்மையில் டோக்கியோவில் நடைபெற்ற இலங்கைக்கு நிதியுதவி வழங்கும் மாநாட்டின் மூலம் கிடைத்த நிதியுதவி வடக்குக் கிழக்கிற்கு மட்டுமல்லாது நாட்டின் அனைத்துப் பகுதிகளுக்குமான புனருத்தாரண அபிவிருத்தி வேலைகளுக்குச் செலவு செய்யப்படும். இந்நிலையில் தற்போது மேற கொள்ளப்பட்டு வரும் சமாதான முயற்சிகள் வெற்றி பெறுவது திண்ணம். இவ்வாறு திலக் மாரப்பன மேலும் தெரிவித்துள்ளார். (வ)

## புலிகள் கைது செய்த இருவர் விடுதலை

(மட்டக்களப்பு)

விடுதலைப்புலிகள் கைது செய்து தடுத்து வைத்திருந்த பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த இருவரை, நேற்று அவர்கள் விடுதலை செய்ததாக அக்கரைப்பற்றுப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வெலிகந்தையில் கடந்த 19ம் திகதி, விடுதலைப்புலிகள் கைது செய்து தடுத்து வைத்திருந்த பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த சாரதி ஒருவரும் மாணவர் ஒருவருமே விடுதலை செய்யப்பட்டவர்களாவர்.

இவர்கள் இருவரையும் மட்டக்களப்பு செங்கலடியில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகள் முன்னிலையில் புலிகள் அக்கரைப்பற்று உதவிப் பொலிஸ் அத்தியட்சகரிடம் ஒப்படைத்துள்ளனர்.


(இ)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## நயினையில் வீற்றிருந்து நமை ஆளும்

# அகிலாண்ட நாயகிக்கு இன்று கொடியேற்றம்

"அகிலாண்டக் கோடி ஈன்ற அன்னையே பின்ளையுங்கன்னி என மறை பேசும் ஆனந்த ரூபமயிலே" என்பார தாயுமான சுவாமிகள். 84 நூறாயிரம் யோனி பேதங்களிலும் கருவாகி, உய்ராக பரிணமிப்பவள் அன்னை. அவ்வவ் உருவங்களின் பெயர்களால் உயிரை மேவிய உடலாகி கலந்து நின்று பெற்றதால் பெறும் உயிர்



அனைத்தும் பேணலால் பெற்றிடுவோர் உற்றதால் விருமபிய அனைத்தும் உதவலால் எக்கலையும் சொற்றதால் உலகொடு வானும் தொழுதலால் என்றென்றும் பற்றதாம் கருணை பொழிதலால் ஸ்ரீ புவனேஸ்வரி என்று போற்றப்படுகின்றனள்.

அறுபத்து 'நான்கு சக்தி பீடங்களில் ஸ்ரீ காமயோகினி, ஸ்ரீ புவனேஸ்வரி ஒன்றாக அமைந்த பீடம், அருந்தவர்கள், அமரர் எண்ணாயிரம் கோடி. அவர் தம் தலைவர்கள் முப்பத்து முக்கோடி அமரர் கோன் இந்திரன் வேண்டுதலால் அமைந்த பீடம் இதுவேயாம். அன்று மணிப்பீடம்,மணித்துவீபம், சிந்தாமணிப்பீடம் என்று அழைக்கப்பட்ட பீடம் இன்று நாகத்தீபம், நாகத்தீவு, நாவலந்தீவு,நயினாதீவு என்று பல பெயர்களால் அழைககப்படும் உலக யாத்திரைத் தலங்களில் எங்கும் காணாத சிறப்புடையதாக விளங்குகின்றது.

தேவகோனது பாவ விமோசனம் நீக்கற்பொருட்டு உலக மாதா ஸ்ரீ புவனேஸ்வரி ஆனிப்பூரணையில் இங்கு தோன்றி சிவசக்தி ரூபினியாக ஏக நாயகியாக விலை மதித்தற்கரிய மணிப்பீட சிந்தாமணித் தவிசு அமர்ந்து அருள் பாலித்த தினமே இங்கு மகோற்சவ காலமாக கருதப்பட்டு வருகின்றது.

சர்ப்பமூர்த்தியாகிய ஆதிசேடனும, நாராயணனும், மகாலட்சுமியும், தேவ அதிபதிகளும், தேவ கோடிகளும், பிரம்மா, சரஸ்வதி போன்றவர்களும்,சப்தரிஷிகளும் சிவசக்தி ரூபினியாக விளங்கிய அன்னையை கிரேத,திரேத யுகங்களில் வழிபட்டு பெரும் பேறடைந்தனர். நயினையில் இன்றும் கூட சிவாலயம் தனிமையில் அமைக்க முடியாத காரணம் சிவமும் சக்தியும் இணைந்த தலமிது என்பதால் ஆகும்.

இங்குள்ள மகாசக்தி இன்று நாகபூசணி, நாகம்மாள், நாகேஸ்வரி என்று அழைக்கப்படுகின்றாள். காசியில விசாலாட்சி அன்னை பூரணிக்கும் தில்லைமன்றாடும் சிவகாமிக்கும் ஆலவாய் (மதுரை) மீனாட்சிக்கும் மிக நெருங்கிய தொடர்பு இத்தலத்திலிருந்தே கிடைப்பதாக ஸ்ரீ காஞ்சி காமகோடி பெரிய சுவாமிகள் குறிப்பிட்டுள்ளதை யாவரும் உணர்வர்.

இத்திருக்கோவிலின் மூல மூர்த்தியாகிய சர்ப்பமும், லிங்கமும், பீடமும் தோன்றிய காலங்களை இந்திய அகழ்வாய்வாளர் குறைந்தது 14 ஆயிரம் ஆண்டுகளாக குறிக்கின்றனர். அன்றைய தகவல் கணிப்புக் கருவியின் எல்லை அதற்கு மேல் அமையவில்லை.

நயினை நாகம்மாளை முற் காலத்தில் தரிசித்தவர்களில் இராவணாதியரும், மண்டோதரியும்,மகா நாகர் புலாதரநாகராசாக்களும் அவர் தம் வாரிசுகளும் அடங்குவர். மெய்ஞானம் வேண்டி ஆகாயப் பிரவேசம் செய்த போதி மாதவன் இங்கு தோனறிய பேரொளியில் வைகாசி விசாகத்தின் இருக்கை அமர்ந்து ஆனிப் பூரணையில் அன்னையைத்தரிசித்து பேறடைந்ததால் இரு தடவைகள் இங்கு வந்து போந்தனர். இன்றும் அச்சுவடுகளை நயினையில் காண முடியும். தேவகோனால் அமைக்கப்பட்ட விலைமதித்தற்கரிய அன்னையின் மணிச் சிம்மாசனத்தில் தான் இந்த மகிமை இருப்பதை எண்ணிய நாக அரசர்கள் மணிப்பீடச் சிம்மாசனத்தை தாம ஆட்சி அமைத்த கல்யாணிக்கு (களனி) மாற்றினர் என்பது வரலாறு. சிம்மா சனம் பிரித்தெடுக்கக்கூடியது. பீடமோ, சர்ப்பமோ பிரித்தெடுக்க முடியாதது. இது நம் ஈழ மணணிலேயே உள்ளது. இலட்சோப லட்சம் அடியார்களை அலை கடல்போல் இங்கு வர வழைக்கின்ற புதுமை யாது? என் பதே இக்கட்டுரையின் கருவாகும்.

ஆனிப் பூரணையில் அருள்பெற்ற ஏனையவர்கள், பாண்டவர்கள், அனுமான்போகர், யோகர் தும்புறு, அகத்தியர், மணிமேகலை போன்றவர் மணிமேகலா தெய்வம் என அழைககப்பட்ட ஸ்ரீ புவனேஸ்வரியிடம் அருள் பெற்று உயர்ந்தனர்.

பிற்காலத்தில் மாசாத்துவன், வீராச்சாமி செட்டியார், நயினா படடர ஆகியோரும் பூநாகம் முதலியனவும் தம்மை வழிபட்ட வரலாறு பேசபடுகின்றது. இதன்பின் போர்த்துக்கீசர் வரலாற்றைத் தொடர்ந்த வரலாறு ஒட்டுமொத்தமாக நாகம்மாளது சிந்தனையை ஒருகணம் நோக்கினால்

உலக தலங்கட்குள் ஒப்பரிய மகாசக்தி உறையும் தலம்,மூர்த்தி, தீர்த்தமுடைய பெருஞ்சிறப்பும் ஒரு அடியார் முன்னோக்கி அன்னை நூறு அடி எம்முன்னோக்கி வருதலையும் அருள்தலையும் அற்புதமாகக் காண முடியும்.

நவரெத்தினம் பரந்தாமன்
யாழ். பல்கலைக்கழகம்

## பால்ய இம்சை இழைப்போர் யார்?

- மகிழ்ச்சியற்று கோபம் மற்றும் மன அழுத்தல்களுக்கு உட்பட்டு வாழும் பெற்றோர்.
- பிள்ளைகளைத் தற்காலிகமாகப் பராமரிக்கும் பெரியவர்கள்.

  உதாரணமாக:– பிள்ளைகளை வீட்டுவேலைக்கு அமர்த்துவோர்.
  மத்திய கிழக்கில் தொழில் செய்யும் தாய்மாரின்
  பிள்ளைகளின் பாதுகாவலர்கள்.
- பிள்ளையின் தாயினது பாலியல் துணைவர்
- தத்துப் பெற்றோர்
- பிள்ளையின் விரும்பத்தகாத நடத்தையால் ஆத்திரமடையும் பெற்றோர்/பெரியவர்கள்.
- போதை மருந்துகள் அல்லது மதுப்பழக்கத்துக்கு அடிமையாயுள்ள பெற்றோர்.
- சச்சரவுப்படும் கணவன் மனைவிமார்.
- சிறுவர்களாயிருந்த காலத்தில் இம்சிக்கப்பட்ட பெரியவர்கள்.
- பிள்ளைகளை விற்பதிலும், கடத்துவதிலும் ஈடுபட்டுள்ளவர்கள்.
- பிள்ளைகளை வியாபார நடவடிக்கையில் ஈடுபடுத்தும் ஆட்கள்.
- பிள்ளைகள் மீது அதிகாரம் உடையவர்கள்.
- நெருங்கிய குடும்ப உறவினர்கள்.

வெளியீட்டு அனுசரணை:-
சிறுவர் பாதுகாப்பு நிதியம்
(C/6363)

உங்கள் தொடர்புகளுக்காய், எங்கள் முகவரி:
மாவட்ட சிறுவர் பாதுகாப்புக்குழு
அறை எண் - 30
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.
T.P:- 021-222 5657

## மணிபல்லவத்தில் மஹோற்சவம்

## இன்று கொடியேற்றம்



## நயினை நாகபூசணி அம்மன் பாமாலை

**நலம் நிறைந்து வாழ்வுதர நயினையிலே கொடியேற்று!**

எழில் பொங்கும் நயினையிலே ஏற்றம்மா கொடியை
ஏற்றதோர் தீர்விங்கே மலர ஏற்றம்மா கொடியை
பொழில் சூழ்ந்த தீவகத்தின் பூசனியே ஏற்றம்மா கொடியை
போர் நீங்கி சமாதான வாழ்வு மலர ஏற்றம்மா கொடியை
அருள்சுரந்து அரவணைக்கும் நாகபூசனியே ஏற்றம்மா கொடியை
அவனியிலே மங்களங்கள் பெருக ஏற்றம்மா கொடியை
வரும்காலம் தமிழருக்கு வளமாக அமைய ஏற்றம்மா கொடியை
வழிபட்டு உய்வதற்கு வழிகாட்டி ஏற்றம்மா கொடியை

மதுரகவி காரை. எம்.பி.அருளானந்தன

### விடிவீயும் விதமென்னே!

கொடியேற மிடி தீரும்
படியேறப் பழி தீரும்
நொடி யேனும் பிசகாது
விடிவீயும் விதமென்னே!

நயினைப் பதி யமர்ந்து
நல்லாட்சி நல்கு முந்தன்
பயனைப் பெறு வதற்குப்
பலர் தேடி வருகின்றார்!

உன்னடியைத் தொழு வதனால்
ஊழ்வினைக ளே யகலும்
அன்பதனால் அரு ளீயும்
அன்னை யுனக் கீடுண்டோ?

பொங்கு தமிழ் புரக்கும்
பொன்மகளே! எம் மினத்தை
தங்கு தடை யின்றித்
தாரணியில் வாழ வைப்பாய்!

கூத்தாடி வி.சி.குஞ்சிதபாதம்

### பாதமே பணி வரந்தாராய்

தஞ்சமே தாள தேயெனக் கெஞ்சவே நாடு யாவையுந்
தங்குமா றேப ராபரை - யருள்வாயே
தந்தமே சூடு யானையைக் கொன்றுமே லாடை யாமெனக்
கொண்டகோ நாளு மேமகிழ் - உமையாளே!
வஞ்சமார் மூபு ராதிகள் வெந்துபோ மாறு வேநகை
சிந்துவா ரோடு ஆடிடு - பெருவாழ்வே
வந்துமே நாக மோடமர் வஞ்சியே பாடி யேதொழும்
சிந்தையே சேர வேமன மிரங்காயோ?
பஞ்சமா பாவ மேபுரி எந்தைமேல் நேச மாய்உயர்
வெய்தவே பாத மேபணி - வரந்தாராய்
பண்ணினால் நாம மோதிடு புண்யனார் சேம மேயுற
பந்தமாய் வாரி யேயருள் - புரிதாயே
அஞ்சவே பாயு நீரலை பஞ்சுநேர் பாத தாமரை
கொஞ்சியே மீள வீசலைக் - கடல்சூழ
அன்பினால் நாடு வாரிடர் துஞ்சவே நாளு மேயருள்
நின்றுவார் நாக பூசணி - அம்பாளே!

நாயன்மார்கட்டு இராசையா குகதாசன்.

### "உன்னருளே தந்திடு"

வல்லாழி சூழ தென் காற்று வீச
கல்லோலம் கரை மோதி நாதம் எழ
நல்எயில் நயினை அம்பதி உறை நாகேஸ்வரியே
நாராயணன் தங்கையே நாகம்மை!
கொல்யுத்தம் நீங்கி குலமிரண்டும் இணைந்து
கொள்கை, சமாதானம், பெருவாழ்வு
எல்லோரும் வாழவே உன் அருளே தந்திடுவாய்
ஏகாம்பரியே! நாக ராசராசேஸ்வரியே!

"ஈழமோகன்"

**ஆலய மண்டபத்தில் இன்று ஆன்மீக சொற்பொழிவாற்றுவோர்**

இசைப் பேரரசு நா.வி.மு.நவரத்தினம்
(தலைவர் இசைத்துறை - யாழ். பல்கலைக்கழகம்)

திருமதி நாச்சியார் செல்வநாயகம்
(தலைவர் இந்துநாகரிகத் துறை - யாழ். பல்கலைக்கழகம்)

# உலக சமாதானத்தின் எதிரியாக வடகொரியா செயற்படுகின்றது

## ஜப்பானுக்கான அமெரிக்கத் தூதுவர் கண்டிக்கிறார்

(டோக்கியோ)

உலக சமாதானத்திற்கு வட கொரியா அச்சுறுத்தலாக உள்ளது என ஜப்பானுக்கான அமெரிக்கத் தூதுவர் ஹவாட் பெக்கர் கடுமையான கண்டனத்தை வெளியிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் டோக்கியோவில் நடைபெற்ற வர்த்தகப் பிரதிநிதிகளுக்கான மாநாட்டிலேயே அவர இவ்வாறு தனது கண்டனத்தை வெளியிட்டிருந்தார். இதுவிடயம் குறித்து அங்கு அவர் மேலும் குறிப்பிடுகையில்,

வடகொரியா தனது அணுவாயுத திட்டத்தை கைவிடுவதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கவேண்டும் என அந்த நாட்டை வலியுறுத்தியுள்ளார்.

மேலும், வடகொரியா விவகாரங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் பலதரப்புப் பேச்சுவார்த்தைகளை அந்த நாடு ஏற்றுக்கொள்ள வேண்டும் எனக் கூறியுள்ளார்.

இதேவேளை, வடகொரியா தனது அணுவாயுதத் திட்டங்களை கைவிடப் போவதில்லை என் அண்மையில் அறிவித்திருந்த நிலையிலேயே ஹவாட் பெக்கர் தனது இந்த கருத்துக்களை முன்வைத்துள்ளார். (க-2)



இந்தியாவின் போபால் நகரில் ஆளுநர் வீட்டிலிருந்த 9 அடி நீளமுள்ள 2 நச்சு விரியன் பாம்புகளை பிடித்த முகமது சலீம். பாம்புகளைப் பிடிப்பதற்காகவே மத்திய பிரதேச மாநில அரசில் இவர் பணியாற்றி வருகின்மை குறிப்பிடத்தக்கது.

# தனது சீன விஜயம் குறித்து இந்தியப் பிரதமர் மகிழ்ச்சி

(பெய்ஜிங்)

மிக நீண்ட காலமாக நிலவி வரும் இந்தியா- சீனா எல்லைப் பிரச்சினைக்குத் தீர்வு காணவும் இரு நாடுகளுக்கிடையில் நம்பகத் தன்மையைக் கட்டியெழுப்பவும் தனது சீன விஜயம் வழிவகுத்திருப்பதாக இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் பெரும் மகிழ்ச்சி அடைந்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை சீனாவிற்கான விஜயத்தை மேற்கொண்ட வாஜ்பாய் நேற்று முன்தினம் நாடு திரும்ப முன்னர் நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே இவ்வாறு கூறியுள்ளார்.

மேலும்,அவர் தனது விஜயத்தின் மூலம் இரண்டு நாடுகளுக்குமிடையில் புதிய உறவுகளைக் கட்டியெழுப்பக்கூடிய சூழ்நிலை உருவாக்கப்பட்டுள்ளதாகவும் சீனத் தலைவர்களுடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளின்போது சரியான திசையை நோக்கி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (க-2)

# அணுசக்தி நிலையம் அமைப்பது தொடர்பான பிரச்சினை தாய்வானிலும் தலைதூக்கியுள்ளது

## வாக்கெடுப்பு நடாத்த ஜனாதிபதி முடிவு

(தைப்பி)

தாய்வானின் அணு சக்தி நிலையம் தொடர்பாக மக்களின் கருத்துக்களை அறியும் பொருட்டு வாக்கெடுப்பு நடத்தப்படும் என்று அந்நாட்டு ஜனாதிபதி ஷென்ஷீபியான் நேற்று முன்தினம் அறிவித்துள்ளார்.

கடந்த அரசாங்கத்தினால் அனுமதி வழங்கப்பட்டு தற்போது நிர்மாணிக்கப்பட்டுவரும் நிர்மாணப் பணிகளைத் தொடர்ந்தும் முன்னெடுப்பதா என்பது குறித்து பொது மக்களே தீர்மானிக்கவேண்டும் என்று ஷென்ஷீபியான் குற்றம் சாட்டியுள்ளார்.

இந்த அணு சக்தி நிலையத்தை அமைப்பதற்கு 550 கோடி அமெரிக்க டொலர்கள் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் இந்த நிதியைப் பயன்படுத்துவதா இல்லையா என்பது குறித்து நடாத்தப்படவுள்ள வாக்கெடுப்பிலேயே முடிவு செய்யப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தாய்வானுக்கும் சீனாவிற்கும் இடையில் நிலவி வந்த அணுசக்தி நிலையம் அமைப்பது தொடர்பான முறுகல் நிலை தாய்வான் பிரதமரின் இந்த அறிவிப்பினைத் தொடர்ந்து மேலும் அதிகரித்துள்ளதாக அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். (க-2)

# ஊடுருவலைத் தடுப்பதாக உறுதிகூற முடியாது

## பாக். அதிபர்

(வாஷிங்டன்)

இந்திய-பாக். எல்லையில் பயங்கரவாத ஊடுருவல்களைத் தடுப்பதாக உறுதி கூற முடியாது என்று பாகிஸ்தான் அதிபர் பர்வேஷ் முஷாரப் கூறியுள்ளார்.

அரசு முறைப் பயணமாக அமெரிக்கா சென்றுள்ள முஷாரப் வாஷிங்டன் போஸ்ட் இதழுக்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளதாவது,

இந்தியாவுக்குள் எத்தனை பயங்கரவாதிகள் ஊடுருவுகின்றார்கள் என்று கூற முடியாது. அது எனக்குத் தெரியவும் தெரியாது. என்னைப் பொறுத்தவரை எல்லையில் ஊடுருவல் இல்லை என்று தான் சொல்வேன். அதை மட்டுமே பாகிஸ்தானால் செய்ய முடியும்.

பாகிஸ்தானில் இருந்து காஷ்மீருக்கு ஒரு பயங்கரவாதி கூட ஊடுருவவில்லை என்று என்னால் உத்தரவாதமளிக்க முடியாது. எல்லைப் பகுதியில் இருந்து ஒரு பறவை கூட இந்தியாவுக்குள் ஊடுருவவில்லை என்று நான் உறுதி அளிக்க முடியும். இதை எந்த மனிதனாலும் செய்ய முடியாது. இந்திய-பாக். எல்லைக்கும் சீரிட முடியாது.

லஷ்கர்-இ-தொய்பா, ஜெய்ஷ்-இ-முகமது போன்ற பயங்கரவாத அமைப்புக்களை பாகிஸ்தான் அரசு தடை செய்துள்ளது. இந்த அமைப்புக்களிற்கு பாகிஸ்தான் முழுவதிலும் நூற்றுக்கணக்கான அலுவலகங்கள் சீலிடப்பட்டன. அந்த அமைப்புக்களின் வங்கிக் கணக்குகள் முடக்கப்பட்டுள்ளன. இதுவரை யாரும் செய்யாததை நான் செய்துள்ளேன்.

இந்தியாவுடனான உறவு எப்போதுமே திருப்திகரமாக இருந்ததில்லை. இந்தியாவுடன் போர் செய்ய விரும்பவில்லை. இதுவரை 3 முறை போர் செய்துள்ளோம். அதன் விளைவுகள் குறித்து நான் நன்கறிவேன் என்றார். (பி)



புதுவையில் கடந்த வெள்ளிக்கிழமை சூரியனைச் சுற்றி காணப்பட்ட ஒளிவட்டம். இது காலை 11 மணிமுதல் 3.30 மணிவரை தென்பட்டது.

# அயோத்திப் பிரச்சினை குறித்த விஷ்வபரிஷத்தின் கோரிக்கையை பி.ஜே.பி. நிராகரித்துவிட்டது

(புதுடில்லி)

அயோத்தியில் இராமர் ஆலயம் கட்டுவதற்கு சட்டம் இயற்ற முடியாவிட்டால் தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இருந்தும் அரசாங்கத்தில் இருந்தும் பாரதிய ஜனதாக் கட்சி வெளியேற வேண்டும் என்று விஷ்வஹிந்துப்பரிஷத் கோரியிருப்பதை அக்கட்சித் தலைவர் வெங்கையா நாயுடு நிராகரித்து விட்டார்.

நேற்று முன்தினம் சென்னையில் செய்தியாளர் கூட்டத்தில் பேசிய அவர், தேசிய அரசிற்கான செயற்திட்டத்துடன் தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு இயங்குகிறது. இக்கூட்டணிக் கட்சிகள் மீது விஷ்வ ஹிந்துப் பரிஷத்தின் தனிப்பட்ட கருத்துக்களை பி.ஜே.பி ஒருபோதும் திணிக்காது.

அதே சமயம் அயோத்திச் சிக்கலுக்கு தீர்வு காணும் முயற்சிகளில் தீவிரமாகத் தான் ஈடுபட்டு வருவதாகவும் காஞ்சி சங்கராச்சாரியார் ஜெயந்திரசரஸ்வதி சாமிகள் மேற்கொண்டிருக்கும் முன்முயற்சிகளை தாம் வரவேற்பதாகவும் கூறியுள்ளார். (க-9)

# பாகிஸ்தான் நாடாளுமன்றத்தில் நேற்றுக் கருத்து மோதல்கள்

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தானில் ஆர்ப்பாட்டப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள எதிர்க் கட்சிகளுக்கும் அரசாங்கத்திற்குமிடையில் நேற்று நாடாளுமன்றத்தில் கருத்து மோதல்கள் ஏற்பட்டுள்ளன.

அதிபர் ஜெனரல் பர்வேஷ் முஷாரப்பின் அரசியல் சாசனத்திருத தங்கள் சட்டபூர்வமானவை என்று அறிவித்த சபாநாயகரை எதிர்த்து நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்திருக்கும் எதிர்க்கட்சிகள் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தியுள்ளனர்.

ஆனால் எதிர்க்கட்சிகள் சட்டம் ஒழுங்குப் பிரச்சினையை ஏற்படுத்தினால் அவர்களுக்கெதிராக கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அரசு எச்சரித்துள்ளது. இதனையடுத்தே நேற்று பாகிஸ்தான் பாராளுமன்றத்தில் கருத்து மோதல்கள் ஏற்பட்டுள்ளன.

பாகிஸ்தானில் கட்சிகளுக்கிடையே ஏற்பட்டுள்ள இப்பிரச்சினைகள் இந்திய- பாகிஸ்தானுக்கிடையிலான சமாதான நோக்குகளுக்கும் ஒரு முட்டுக்கட்டை இட்டுவிடும் என பாகிஸ்தான் அதிகாரிகள் விசனம் தெரிவித்துள்ளனர். (க-9)

# மத்தியகிழக்கு சமாதானத் திட்டத்தை மாற்றியமைக்க லிபியா முயற்சி

## அமெரிக்கக் கருத்துக்கு காத்திருப்பு

(திரிப்போலி)


அமெரிக்காவின் ஆதரவுடன் தயாரிக்கப்பட்ட மத்தியகிழக்கு சமாதானத்தை நோக்கிய வழிகாட்டல் வரைபை திருத்தியமைப்பதற்கு லிபியத் தலைவர் மொகமட் கடாபி முன்வந்துள்ளார்.

பலஸ்தீனத்தையும் இஸ்ரேலையும் தனி இராட்சியமாகக் கொண்ட வழிகாட்டல் வரைபு ஒன்றையே தாம் தயாரிக்கவிருப்பதாக அவர் கூறியுள்ளார்.

பலஸ்தீனர்களுக்கும் யூதர்களுக்கும் அடிப்படையானதும் சரித்திரம் வாய்ந்ததுமான தீர்வொன்று மிக அவசியமானது என குறிப்பிட்ட கடாபி, இரண்டு நாடுகளுக்குமிடையில் பகிர்ந்தளிக்கக்கூடிய நிலப்பரப்பு மிகக் குறுகியதாகவே காணப்படுவதாக தெரிவித்துள்ளார்.

லிபியத் தலைநகர் திருப்போலியிலிருந்து செய்மதி ஊடாக லண்டனில் இருக்கின்ற மாணவர் குழுக் கூட்டமொன்றிற்காகப் பேசிய போதே அவர் இந்தக் கருத்துக்களை முன்வைத்துள்ளார்.

இதேவேளை, லிபியத் தலைவரின் இந்தக் கருத்துக் குறித்து அமெரிக்கா எந்தக் கருத்தினையும் இதுவரை தெரிவிக்காத போதிலும் இதனை அது ஏற்றுக்கொள்ளுமா என்ற சந்தேகம் பலதரப்பிலும் எழுந்துள்ளது என மத்திய கிழக்கு சமாதானத் திட்டத்துடன் தொடர்புபட்ட வட்



கமரா பொருத்தப்பட்ட டிஜிட்டல் டயரி இது. இதன் விலை ரூ. 25 ஆயிரம். இது ஜப்பானில் நேற்று அறிமுகப்படுத்தி வைக்கப்பட்டது.

உலக தரிசனம்

# பெண் நீதிவான் கொலை கணவருக்கு ஆயுட் சிறை

(லண்டன்)


பிரிட்டனில் தனது மனைவியான மஜிஸ்திரேட்டைக் கொன்ற இந்தியரான கணவர் குருதேவுக்கு ஆயுள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

பிரிட்டனில் வசித்தவரான நாரீந்தர் கௌர்மான் என்ற அப்பெண் ஆசியாவைச் சேர்ந்த பெண்களில் மஜிஸ்திரேட் பதவியைப் பெற்றவர்.

...வில்லை என்று மதுபோதையில் இருந்த கணவர் குருதேவ் ஆத்திரமடைந்து கத்தியால் மனைவியின் வயிற்றில் பலமுறை குத்தினாராம்.

சம்பவத்தை பல்கலைக்கழக மாணவரான அவர்களது மகன் ஜஸ்வீந்தர் பார்த்துக் கொண்டிருந்துள்ளார்.

இவ்வழக்கை விசாரித்த லைசெஸ்டர் நீதிமன்றம் குருதேவுக்கு ஆயுட்



உலக போதைப் பொருள் எதிர்ப்புத் தினம் நேற்று முன்தினம் இந்தியாவில் கடைப்பிடிக்கப்பட்டது. இதையொட்டி பாங்கொங்கின் வட பகுதியில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த போதைப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. பறிமுதல் செய்யப்பட்ட போதைப் பொருட்களைப் பாதுகாக்கும் காவல்

# ஊர்காவற்றுறை உதவி

# சேவைநலன் பா

# காரைநகர் முதல் உதவி

# வரவேற்பு விழாவும்.

## நல்லை ஆதீனமுதல்வரின் ஆசிச்செய்தி



பேரன்புடையீர்,

சைவத்தையும் தமிழையும் பேணிப் பாதுகாக்கும் பெரும் பணியில் காரைநகர் மக்கள் தம்மை அர்ப்பணித்தவர்கள். நன்றி மறவாத நற்பண்பும் வந்தாரை வரவேற்கும் நயமிகு நாகரிகமும் காரைநகர் மண்ணின் இரு பெரும் சொத்துக்கள் ஆகும். அவ் வகையில் யுத்த சூழ்நிலையிலும் அர்ப்பணிப்பு நிறைந்த சேவையுடன் காரைநகர் மக்களுக்கு பணியாற்றிய ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ். செல்வநாயகம் அவர்களின் அன்பு மிகுந்த பணியை நன்றியோடு நினைவு கூருவது போற்றுதற்குரியது. இ∴து ஒருபுறத்தில் காரைநகர்வாழ் மக்களின் நன்றி செலுத்தும் உயர் சிறப்பையும் மறுபுறத்தில் தனது அளப்பெரும் சேவையால் காரைநகர் வாழ் மக்களின் உள்ளங்களில் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம் அவர்கள் நீங்காஇடத்தைப் பெற்றிருப்பதையும் உறுதிப் படுத்துகின்றது.

இவற்றோடு காரைநகருக்கென தனியான உதவி அரசாங்க அதிபர் பணிமனையின் அவசியம் உணர்ந்த கௌரவ அமைச்சர் தி.மகேஸ்வரன் அவர்கள் அதனை உருவாக்கிய போது அதன் முதலாவது உதவி அரசாங்க அதிபர் என்ற பெருமையோடு பதவி ஏற்ற காரை மண்ணின் மைந்தன் வே.சாம்பசிவம் அவர்களை வரவேற்கும் நிகழ்வு காரைநகர் மக்களின் சமூகப் பற்றுதலையும் தம்மண்மீது கொண்ட பற்றுறுதியையும் எடுத்து இயம்புகின்றன. அவ்வகையில் காரைநகர் வாழ் மக்கள் நயந்தெடுக்கும் இவ்விழா சிறப்புற எம் நல்லாசிகளை வழங்கி மகிழ்வுறுகின்றோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு

*நல்லை ஆதீனம்,*
*நல்லூர்.*

ஶ்ரீலஶ்ரீ சோமசுந்தர பரமாசார்ய சுவாமிகள்
*ஆதீன முதல்வர்*



*காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பணிமனைத் திறப்புவிழாவில் புதிதாக பதவியேற்கும் உதவி அரச அதிபர் திரு. வே.சாம்பசிவம் அவர்கள் அமைச்சர் தி.மகேஸ்வரனுக்கு கைலாகு கொடுத்து வரவேற்கிறார் அருகில் யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன், மேலதிக அரச அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம்போல் ஆகியோர் காணப்படுகின்றனர்.*

## விழா குழுத்தலைவரின் பாராட்டுரை



காரைநகருக்கு சேவை செய்வதற்காக காரைநகர் முதல் பிரதேச செயலராக கடமையேற்றுள்ள திரு.வே.சாம்பசிவம் ஊர்காவற்றுறை பிரதேச செயலராக இருந்து எமது காரை மண்ணிற்கு திறம்பட சேவையாற்றிய ஜே.எக்ஸ். செல்வநாயகம் ஆகியோரை வரவேற்று சேவைநலன் பாராட்டும் விழாவினை நடத்துவதனையிட்டு மகிழ்வடைகின்றேன்.

இவர்கள் இருவரும் காரைநகரைப் பொறுத்தளவில் இவ்வருட கதாநாயகர்கள் என்றே கூறலாம். நாம் இவ்விழாவினைத் திறமையாக நடத்துவதற்காக ஆரம்ப கூட்டம் ஒன்றினை நடத்தினோம். அப்பொழுது காரைநகர் மக்கள் பிரதிநிதிகளாகக் கலந்துகொண்டவர்கள் அனைவரினதும் உற்சாகத்தைப் பார்த்த போதுவியந்துவிட்டேன். இவ்விழாவிற்கான நிதியைப் பெற ஆலோசித்தபோது தேவைக்கு மேலதிகமாக வந்து குவிந்தன. இந்நேரத்தில் நிதி வழங்கிய அனைவரிற்கும் எனது நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

என்னைப் பொறுத்தளவில் இவர்கள் இருவரும் காரைநகருக்கான இரு கண்களைப் போன்றவர்கள். ஊர்காவற்றுறைப் பிரதேச செயலக நிர்வாக அமைப்பில் இருந்து காரைநகர் பிரிந்து தனியான பிரதேச நிர்வாகத்தினை அமைத்தனவே தவிர ஊர்காவற்றுறை பிரதேசத்தில் இருந்து காரைநகர் பிரியவில்லை. காரைநகர் பிரதேச செயலரான வே.சாம்பசிவம் எமது மண்ணின் மைந்தன். அவருக்கு எமது மக்களின் தேவைகள் செய்யவேண்டிய சேவைகள் என்பன நன்கு தெரியும். அதேபோல் செல்வநாயகம் எமது பிரதேசத்தில் களத்தில் நின்றவர். எமது மக்கள் அநாதரவாக விடப்பட்ட நிலையில் அவர்களிற்கு சேவை செய்த உத்தம புத்திரன். எமது கிராமங்கள் ஒவ்வொன்றினையும் நன்றாகப் புரிந்தவர் என்பதுடன் மக்களின் மனங்களையும் நன்றாகப் புரிந்தவர். ஆதலால் இவர்கள் இருவரும் எமது பிரதேச அபிவிருத்தியில் ஒன்றிணைந்து செயற்படவேண்டும் என்று கேட்டுக்கொண்டு எமது பிரதேச செயலரை பாராட்டியும் எமது ஊர்காவற்றுறை பிரதேச செயலரை பாராட்டியும் வாழ்த்துகின்றேன்.

இவர்கள் இருவரும் நீண்ட ஆயுள் பெற்று பல்லாண்டு வாழ பிரார்த்திப்போமாக.

*விழாக்குழுத் தலைவர்.*
*காரைநகர்.*

கே.வி.குலரத்தினம்



ஜே.எக்ஸ்.செல்வநாயகம்


## வந்தோரை வரவேற்பதும், வாழ்த்துவதும் காரைநகர் ம

காரைநகர் தனியான உதவி அரசாங்க அதிபர் பிரிவாக உருவாக்கப்பட்டு அதன் முதல் உதவி அரச அதிபராகப் பதவியேற்றுள்ள திரு. வே.சாம்பசிவம் அவர்களை வரவேற்றும் காரைநகர் ஊர்காவற்றுறையுடன் இணைக்கப்பட்டிருந்தவேளை ஊர்காவற்றுறை உதவி அரச அதிபராகப் பணியாற்றி காரைநகருக்கு மகத்தான சேவையை ஆற்றிய திரு.ஜே.எக்ஸ்.செல்வநாயகம் அவர்களின் சேவை நலனைப் பாராட்டும் முகமாகவும் காரைநகர் மக்களால் மாபெரும் விழா இன்று நடாத்தப்படுகின்றது. இதற்காகக் காரைநகர் விழாக்கோலம் பூண்டிருப்பதனை அவதானிக்கும் போது எமது உள்ளம் மகிழ்வடைகின்றது.

எமது மக்களால் இன்று வரவேற்று வாழ்த்தப்படும் நாயகர்கள் இருவரும் காரைநகர் வரலாற்றில் தனியிடம் பிடித்துள்ளார்கள் என்பதில் ஐயமில்லை. காரைநகர் தனியான ஒரு நிர்வாக அலகாகப் பிரிக்கப்படல் வேண்டும் என்பது கடந்த இரு தசாப்த காலங்களாக எமது மக்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையாகும். ஆனாலும், அக்கோரிக்கைகளை அன்றைய ஆட்சி, அதிகாரிகளால் தட்டிக்கழிக்கப்பட்டு வந்தது. ஆனாலும், இன்று இவ்வாறு தனியான நிர்வாக அலகு காரைநகருக்கு உருவாவதற்கு எமது மண்ணின் மைந்தன் கௌரவ அமைச்சர் தி.மகேஸ்வரனின் பெரு முயற்சியே காரணமாகும். இந்நிலையில் காரைநகர் நிர்வாக அமைப்பின் முதல் உதவி அரச அதிபராக திரு.வே.சாம்பசிவம் பதவியேற்றுள்ளார். இவரும் காரைநகரின் மைந்தன் என்ற முறையிலும் காரைநகரில் முதல் பதவிவகித்த உதவி அரச அதிபர் என்ற வகையிலும் அவர் வரவேற்கப்படுவது முக்கியமானதொன்றாகும். மாவட்ட ரீதியில் தனக்கிருந்த வசதியான பதவியைத் துறந்து எமது மண்ணின் அபிவிருத்திக்காக இப்பதவியை ஏற்றுள்ளார். ஆதலால் இவரை வரவேற்பதுடன் எமது மண்ணிற்குத் திறம்பட தேவையறிந்து சேவையாற்ற வாழ்த்துகின்றேன்.

காரைநகர் மக்களிற்குத் தன்னால் இயன்றவரையில் சேவைசெய்து. சேவையில் நிறைவு கண்டவர். ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் ஜே.எக்ஸ். செல்வநாயகம் அவர்கள். ஆதலால் காரைநகர் மக்களால் மறக்கப்படமுடியாதவர். இவர் 1992 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 3ஆம் திகதி காரைநகர் மணற்காடு முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் உதவி அரச அதிபராக கடமையைப்பொறுப்பேற்றவர். நாட்டு நிலைமை காரணமாக நாம் எமது உறவுகளை உதறிவிட்டு இடம்பெயர்ந்த வேளையிலும், இராணுவக் கட்டுப்பாட்டிற்குள் வசித்த எமது மக்களிற்கு உதவி அரச அதிபராக அல்லாது தானும் ஒரு பெற்ற பிள்ளையைப் போன்று உதவி செய்து சேவையாற்றி மக்களின் மனதில் நிரந்தர இடத்தைப் பிடித்தவர். தான் ஒரு கிறிஸ்தவனாக இருந்தாலும் இந்து ஆலயங்களின் உற்சவ நிகழ்வுகளில் ஆசார சீலராகக் கலந்து சிறப்பிப்பவர். இந்நிகழ்வு அவர் மதசார்பில்லாத தன்மையுடையவர் என்பதை எடுத்துக் காட்டுகின்றது. இவரை மையமாக வைத்து பல்வேறு தலைப்புகளில் ஆராய்ந்தாலும் அத்

## சமாதான நீதிவானின் பாராட்டுரை



ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபராக இருந்து காரைநகர் மக்களுக்கு அரும்பணியாற்றி மக்களின் நன்மதிப்பைப் பெற்ற செல்வநாயகம் அவர்களையும், காரைநகர் தனி உதவி அரசாங்க அதிபர் பிரிவாக்கப்பட்டபின் முதல் அரசாங்க அதிபராகப் பதவியேற்றுள்ள திரு.வே.சாம்பசிவம் அவர்களையும் பாராட்டுவதில் பெருமகிழ்ச்சி அடைவதோடு மென்மேலும் இருவரும் பல உயர் பதவிகள் பெற்று தமிழ் மக்களுக்கு அரும்பணியாற்ற எல்லாம்வல்ல வியாவில் பூரணை பொற்கலை ஐயப்பனைப் பிரார்த்திக்கின் றேன்.

க.சோமசேகரம் ஜே.பி.

*தலைவர் வியாவில் ஐயனார்*
*தேவஸ்தானம்.*

**மலர் சிறப்புற வாழ்த்துவோர்:-**

**காரைநகர் பொது அமை**

# அரசாங்க அதிபருக்கான
# ...ாராட்டு விழாவும்
# ...வி அரசாங்க அதிபருக்கான
# ...சிறப்பு மலர் 29. 06.2003



ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ். செல்வநாயகமும், காரைநகர் உதவி அரச அதிபர் சாம்பசிவமும் கைலாகு கொடுத்து மகிழ்வுறுகின்ற காட்சி.

## ...ம், வாழ்வாங்கு வாழ்வோரை ...ர் மக்களின் தனிப்பண்பாடு



வே.சாம்பசிவம்

தன்மைகள் அனைத்தும் நிறைந்து காணப்படும். இவரை ஆன்மீகவாதியாக, தத்துவவாதியாக, பொருளியலாளராக, உளவியலாளராக எனப் பல்வேறு பார்வைகளில் நோக்கமுடியும்.

பொதுவாக ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் ஜே.எக்ஸ். செல்வநாயகம் அவர்கள் எமது மக்களிற்கு எவரது உதவியும் கிடைக்காத நேரத்தில் சேவையாற்றியுள்ளமை போற்றக்கூடியது. அவரது சேவைக்காலம் ஆரம்பத்தில் பாலைவனப் பயணமாகவே இருந்ததை எம்மால் அறிய முடிந்தது. இவரது சேவைகள் தேவையான நேரத்தில் மக்களிற்குக் கிடைத்தமை எமது மக்கள் செய்த புண்ணியமாகும். முழுமையாக இவரின் சேவைகளை இம்மலரினுள் அடக்க நினைப்பது பாற்கடலை நக்கிக் குடித்து முடித்துவிடலாம் என நினைத்த பூனை என்ற கம்பனின் உதாரணத்திற்கு ஆளாக நேரிடும் என்றே கருதலாம்.

பொதுவாக யார் வேண்டுமானாலும் யாருக்கும் விழா எடுக் கலாம், வாழ்த்தலாம், பாராட்டலாம். ஆனால், எவ்வளவு பொருத் தமானது என்பதுதான் கேள்வியாக இருக்கும். ஆனால், காரைநகர் மக்கள் செயற்கரிய செயல்கள் செய்த, செய்யவிருக்கும் செயல் வீரர்கள் இருவரைத் தேர்ந்தெடுத்து இவ்விழா எடுத்திருப்பதனால் காரைநகர் மக்களும் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

பாராட்டுப்பெறும் இரு நாயகர்களும் இளம் வயதினர். இன்றைய விழா தமது சேவையின் நிறைவு எனக் கருதுவது தவறானதாகும். காரை மக்கள் இவர்களின்சேவையை நேரடியாகப் பாராட்டி இன்னமும் இவர்களின் சேவைகளை பெற்றுக்கொள்ள, வளர்க்க நினைப்பது கண்கூடாகத் தெரிகின்றது.

இன்றைய நாள் மட்டும் உழைத்தது போல் உயிர்வாழும்வரை உங்கள் சேவை எங்களுக்கு தேவை என்பதையே எடுத்துக்கூறுகின்றோம். ஆதலால் தமது சேவைக்காலங்களில் சவால்களிற்கு முகம்கொடுத்துச் சேவையாற்ற வாழ்த்துகின்றோம் .

மக்களின் தேவையறிந்து சேவைசெய்த சேவையாளர்களிற்கு குறித்த காலமறிந்து உரிய நேரத்தில் காரைநகர் மக்கள் பாராட்டுவது மகிழ்ச்சிக்குரியது. வரவேற்பதும், வாழ்த்துவதும் காரைநகர் மக்களின் பண்பாடுகளின் சிறப்பானதொரு அம்சம். அதனையே இன்று வெளிக்கொணர்ந்துள்ளார்கள். ஆதலால் இன்பப் பாராட்டுப்பெறும் இரு அதிபர்களும் தமது வாழ்க்கையிலும், பதவிகளிலும் உயர்ந்து வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து பிரதேசத்திற்கு மட்டுமல்லாது எமது நாட்டிற்கும் அவர்களின் சேவை கிடைக்கப் பாராட்டி வாழ்த்துகின்றேன்.

வரவேற்பதும், வாழ்த்துவதும் எமது தனிப் பண்பாடு
இதுவே எமது இதய சங்கமத்தின் உறுதிப்பாடு.

"கொம்பன்" காரைநகர்

## இந்துகலாசார அமைச்சரின் வாழ்த்துரை



காரைநகர், ஊர்காவற்றுறை பிரதேச செயலகர்களிற்கு காரைநகர் மக்களால் இன்று நடத்தப்படும் வரவேற்பு, சேவைநலன் பாராட்டு விழாவினையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இவ்விழாவின்மூலம் எமது காரைநகர் மக்கள் தமது கலாசார பண்பாடுகளில் இருந்து இன்னமும் விலகவில்லை என்பதை பறைசாற்றுவதாக அமைந்துள்ளது.

காரைநகரானது ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தில் இருந்து பிரிக்கப்பட்டு தனியான பிரதேச செயலகமாக அமைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் தற்போதைய காரைநகர்ப் பிரதேச செயலர் வே.சாம்பசிவம் அவர்கள் மாவட்ட ரீதியான தனது பதவிகளைத் துறந்து எமது காரை மக்களுக்கு சேவைசெய்யவேண்டும் என்ற பெரு நோக்கோடு பதவியேற்றார். இவர் காரைநகர்ப் பிரதேச செயலகத்தின் முதல் பிரதேச செயலர் என்ற பெருமையும் இவரையே சாரும். எமது பிரதேசத்திற்குப் பல அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படவேண்டிய தேவை உள்ளது. ஆதலால் இவர் தனது முயற்சிகளையும், திறமைகளையும் பயன்படுத்தி எமது பிரதேசத்தில் காணப்படும் இயற்கை வளங்களை மூலதனமாகக் கொண்டும், எமது பிரதேசத்தில் காணப்படும் வசதியீனங்களை சவாலாக ஏற்று எமது பிரதேசத்தை அபிவிருத்திப் பாதைக்கு இட்டுச்செல்ல அரும்பணியாற்றவேண்டும் என வாழ்த்தி எனது பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஊர்காவற்றுறை பிரதேச செயலர் ஜே.எக்ஸ். செல்வநாயகம் காரைநகர் மக்களிற்கு திறம்பட சேவையாற்றியுள்ளார் என்பதைவிட காரைநகர் மக்களின் மனங்களை கொள்ளை கொண்டுள்ளார் என்பதே உண்மையாகும். இந்நிலையில் இருந்து இவர் எமது மக்களிற்குச் செய்த சேவையைப் புலப்படுத்தி நிற்கின்றது. இவரது கடந்தகால சேவைக்காலத்தினை எண்ணிப் பார்க்கும்போது முள்ளின்மீது நடந்த காலப்பகுதி என்றே கூறலாம். தீவுப்பகுதி முழுமையாக இராணுவக் கட்டுப்பாட்டிற்குள் வந்தபோது தீவகப் பொதுமக்கள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வந்தனர். உண்ண உணவு இன்றி, உடுக்க உடையின்றி, அத்துடன் உறவுகளைப் பிரிந்த துன்பத்தில் தவித்தனர். அந்தத் துன்பகாலத்தில் தீவுப்பகுதி அனைத்தையும் உள்ளடக்கிய பிரதேச செயலராகப் பதவியேற்று சேவையாற்றினார். இந்த நேரத்தில் எத்தனையோ அரசியல் கட்சிகளின் அழுத்தங்களிற்கும் முகங்கொடுக்கவேண்டி நேர்ந்தது. ஆனாலும், மக்களின் தேவையறிந்து சேவையாற்றிய பெருமை ஜே.எக்ஸ். செல்வநாயகத்தையே சாரும்.

யாழ். மாவட்டப் பிரதேச செயலர்களிற்குள் இளம் வயதில் உள்ள இவர் ஏனைவர்களை விட திறமையான அனுபவசாலி என்பதுடன் ஒரு பொறுமைசாலியாகவும், எதையும் தாங்கும் இதயம் கொண்ட தன்மையுடையவர் என்பதனைக் கடந்தகால நிகழ்வுகள் எடுத்துக் காட்டுகின்றது. இப்படிப்பட்ட இவரின் சேவையைப் பாராட்டாது விடுவோமானால் எமது மண் செய்த மாபெரும் வரலாற்றுத் தவறு என்பதாகும். ஆதலால் எமது மக்களால் இன்று எடுக்கப்படும் இவ் சேவைநலன் பாராட்டுவிழா நாயகனுக்கு எனது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

*இந்து கலாசார அமைச்சர்* தி.மகேஸ்வரன்

## வலயக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச்செய்தி



ஊர்காவற்றுறை உ.அ.அதிபர் திரு.ஜே.எக்ஸ். செல்வநாயகம் அவர்களுக்கும் புதிய காரைநகர் பிரதேசத்தின் உ.அ.அதிபர் திரு.வே.சாம்பசிவம் அவர்களுக்கும் இன்று காரைநகர் மக்களால் எடுக்கப்படும் பாராட்டு விழாவையொட்டி வெளிவரும் சிறப்புமலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பேருவகை அடைகிறேன். காரைநகரில் இருந்து பாரிய இடம்பெயர்வு இடம்பெற்ற வேளையில் அங்கிருந்த ஆதரவற்ற மக்களுக்கு அன்புக்கரம் நீட்டி சேவையாற்றியவர் இளமைத்துடிப்புள்ள உ.அ.அதிபர் திரு. ஜே.எக்ஸ். செல்வநாயகம். 1996இல் இருந்து இடம்பெற்ற மீள் குடியேற்ற செயற்பாட்டிலும் இவரது பணி மகத்தானது. இவருக்கு நன்றிகூறும் இப்பிரிவுபசார விழா காலத்தின் கட்டாயமாகும்.

திரு.வே.சாம்பசிவம் அவர்கள் தனது கஷ்டங்களைப் பொருட்படுத்தாது ஊரபிமானத்துடன் புதிதாக உதயமான காரைநகர் உ.அ.அதிபர் பிரிவைப் பொறுப்பேற்றமை பாராட்டுதற்குரியது. காரைநகரின் பல பொதுப் பணிகளில் முன்னின்று உழைக்கும் திரு.வே.சாம்பசிவம் அவர்களைப் பாராட்டுவதும், வரவேற்பதும் நமது கடமை. இவ்விருவருக்கும் விழா எடுப்பதன்மூலம் எமது கிராம மக்களின் பண்பாடு உயர்ந்து காணப்படுகிறது. இருவரும் மேலும் பல சேவைகளைப் புரிய கருங்காலிப்பதி போசுட்டி முருகனின் திருவருளைப் பிரார்த்திக்கிறேன்.

*வலயக் கல்விப் பணிப்பாளர்,*
*வலயக் கல்வி அலுவலகம்*
*யாழ்ப்பாணம்.*

ப.விக்னேஸ்வரன்

...மப்புகள்

மலரமைப்பு:
ப.ஐங்கரன்
(காரைநகர் செய்தியாளர்)

தமிழர் தாயகத்தில்

# இராணுவ நெருக்குதல்களின் மத்தியில் இயல்பு வாழ்வு ஏற்பட முடியாது

## கஜேந்திரகுமார் எம். பி. பொங்குதமிழ் நிகழ்வில் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலங்கா இராணுவத்தின் ஆக்கிரமிப்பு தமிழர் தாயகத்தில்



தொடர்கிறது. தமிழ் மக்கள் மீதான இராணுவ நெருக்குதல்கள் அதிகரித்தவண்ணம் உள்ளன. இவ்வாறான சூழ்நிலையில் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் வலியுறுத்தப்பட்ட இயல்பு நிலை தமிழர் தாயகத்தில் உருவாக்கப்படமுடியாது.

யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட மைதானத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்ற பொங்கு தமிழ் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய அகில இலங்கை தமிழ்காங்கிரஸ் பிரமுகரும், யாழ்.மாவட்ட எம்.பியுமான பொன்னம்பலம் கஜேந்திரகுமார் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

வரலாற்றின் திருப்பு முனையில் நின்று கொண்டிருக்கும் தமிழ் தேசிய இனத்தின் அரசியல் அபிலாஷைகளை வெளிப்படுத்தும் ''பொங்கு தமிழ்'' நிகழ்வில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் சார்பில் உறையாற்றுவதையிட்டு பெருமிதம் அடைகின்றேன். கடந்த கால ''பொங்கு தமிழ்'' நிகழ்வுகள் முதலாவதாக போர்ச்சூழலில் மக்களின் எழுச்சியின் மத்தியில்;

உருப்பெற்ற யுத்த நிறுத்தம்.
விடுதலைப்புலிகள் மீதான தடை நீக்கம்.
மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை ஆகிய கருப்பொருள்கள் முன்னிலைப்படுத்தப்பட்டன.

இரண்டாவது நிகழ்வில் தமிழ் தேசிய இனத்தின் அரசியல்
-அபிலாசைகளான :-
-தமிழ் தேசிய இனம்
-தமிழர் தாயகம்
-சுய நிர்ணய உரிமை
ஆகியன வலியுறுத்தப்பட்டன.

முதலில் இரண்டு பொங்கு தமிழ் நிகழ்வுகளின் போது வலியுறுத்தப்பட்ட கருப்பொருளின் அடிப்படையில் யுத்த நிறுத்தம் அமுலாக்கப்பட்டு பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்டாலும் கடந்த 16 மாத யுத்த நிறுத்தத்தில் தமிழ் தேசிய இனத்தின் அகதி வாழ்க்கை, அவல வாழ்க்கை இன்னும் தொடர்கிறது.

இப்படியான காரணங்களினாலும், அத்துடன் தற்போது முன்னெடுத்துச் செல்லும் பேச்சுவாத்தைகளில் தமிழர் தரப்பு சமபங்காளி அந்தஸ்தில் இருந்து ஓரங்கட்டப்பட்டபடியாலும் பேச்சுவார்த்தைகள் தேக்க நிலையை அடைந்துள்ளது.

அதன் பிரதிபலிப்பாக சமாதானத்தை நோக்கி ஏங்கிக் கொண்டிருந்த தமிழ் இனம், பேச்சுவார்த்தையில் நம்பிக்கை இழந்து கொண்டு வருகிறது என்பது நாம் எல்லோரும் அறிந்த உண்மை.

பேச்சுவார்த்தை மீதான நம்பிக்கையை மீளக் கட்டியெழுப்புவதற்கு தமிழர் தரப்பினரின் சம பங்காளி அந்தஸ்து மீளவழங்கப்பட்டு தமிழர் தாயகத்தில் இயல்பு நிலையை உருவாக்க யுத்தத்தினால் சின்னாபின்னப்படுத்தப்பட்ட பொருளாதார வளங்களை மீளமைப்புச் செய்ய சகல அரசியல் நிதி, நிர்வாக கட்டமைப்புகளை தமிழ் தாயகத்திற்கு வழங்கப்படவேண்டும்.

இது தமிழீழ விடுதலைப் புலிகளின் கீழ் இயங்கவேண்டும். இந்த இடைக்கால நிர்வாகம் எமது இனத்தின் இறுதி இலட்சியத்திற்கான முன்னோடியாக அமைய வேண்டும்.

இந்த இடைக்கால நிர்வாக கட்டமைப்பை தமிழர் தாயகத்திற்கு வழங்கும் பொறுப்பு தென்னிலங்கை சிங்கள தலைமைத்துவத்திற்கே உரியது.

அப்பொறுப்பை அவர்கள் சரிவர செயற்படுத்தாத பட்சத்தில் பேச்சுவார்த்தை முறிவடைவதற்கான முழுப்பொறுப்பையும் சிங்கள தலைமைத்துவமே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

கடந்த 50 வருடங்களாக ஏமாற்றப்பட்ட தமிழ் தேசிய இனம் இப்பொழுது ஏமாற்றப்படமுடியாத பலமிக்க தமிழ் தலைமைத்துவத்தின் கீழ் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளது.

''பொங்கு தமிழ்'' நிகழ்வில் கருப்பொருளான 'எமது மண் எமக்கு வேண்டும்' என்ற கொள்கையின் அடிப்படையில் செயற்படுகின்ற தமிழீழ விடுதலைப்புலிகளின் கரங்களை பலப்படுத்துவது ஒவ்வொரு தன்மானமுள்ள தமிழனின் கடமையாகும்.

2001ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தல் நடைபெற்ற போது தமிழ் தேசிய இனம் தாம் எமது இனத்தின் பேரால் ஒற்றுமைப்பட்டு நிற்பதையும் தாம் தமிழீழ விடுதலைப் புலிகள இயக்கத்தின் பின் முற்று முழுதாக அணிதிரண்டிருப்பதையும் முழு உலகுக்குமே பறை சாற்றியது. இந்த ஒற்றுமைதான் இன்று நடைபெறும் பேச்சுவார்த்தை மேசையில் எமது கரங்களைப் பலப்படுத்தியுள்ளது. இந்த ஒற்றுமையை நாம் எக் காரணம் கொண்டும் பலவீனமாக்க அனுமதிக்க முடியாது 'ஒற்றுமை நீடித்தால் எமது விடிவு நிச்சயம்' என்றார்.(க)

# புலிகள்-அரசு பேச்சு தொடர்வதற்கு இடைக்கால கட்டமைப்பு அவசியம்

## ஈ.பி.ஆர்.எல்.எவ். பிரமுகர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

எத்தகைய தடை வந்தாலும் இடைக்கால நிர்வாக கட்டமைப்பு அமையாது பேச்சுவார்த்தை முன்னெடுப்புக்களை நகர்த்த முடியாது என ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் பிரமுகர் சுரேஸ் பிரமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் வண. பிதா யோகான் தேவானந்தா தலைமையில் நடைபெற்ற சமாதானப் பேரணியின் ''சாமாதானத்தை தெருக்களில் பகிர்ந்து கொள்ளல்' எனும் கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; இடைக்கால நிர்வாக கட்டமைப்பானது காலம்காலமாக போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் தமது எதிர்காலத்தை சிறந்த முறையில் நிர்ணயிக்கக் கூடிய அபிவிருத்திகளை மேற்கொள்வதற்கான ஓர் நியாயமான கோரிக்கையாகும. இதனை உரியஅதிகாரத்துடன் எமக்கு தரவேண்டியது அரசின் கடமை. இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் போது ஆளும கட்சி எடுக்கும் எந்தவொரு நல்லெண்ண முயற்சிக்கும் குந்தகமாக அமையக் கூடாது.

ஆனால் இங்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் ஜனாதிபதி சந்திரிகாவும் தமிழருக்கு ஓர் திருப்திகரமான கட்டமைப்பை வழங்குவதில் ஒருவருக்கு ஒருவர் முரண் பாடாகவே கருத்தைப் பரிமாறுகின்றனர்.

எனவே, இந்த சமாதானத்தை சிறந்த முறையில் முன்னெடுப்பதற்கு இவ்விருவரும் ஒரே சிந்தனையுடன் செயற்பட்டால் மாத்திரமே இதற்கு ஒரு நல்ல தீர்வு உண்டு.

இக்கொள்கையில் இருவரும் உடன்படாவிட்டால் இப்பிரச்சினை மீண்டும் நீண்டு செல்லும்

நாமும் எம்மக்களை சில கோரிக்கைகளை கைவிட்டு தற்போது தமிழ் தரப்பு என புலிகளும் -தமிழ் தேசிய கூட்டமைப்பும் ஒருமித்த குரலில் கோரும் எமது சமஷ்டிக்கொள்கை நிறைவேற்றப்படுவதற்கு முதல் கட்டமாக அதிகாரமுடைய இடைக்கால நிர்வாகம் வழங்கப்படுதல் அவசியம்.

அத்துடன் பாதுகாபபு வலயங்களை நீக்கி, அரசு எம் அபிவிருத்திக்கு வழி விட வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (க-4)

விஜி வீடியோ விஷன்
போட்டோ & ஸ்ருடியோ
திறப்பு விழா
காலம்:- 30.06.2003 திங்கட்கிழமை
நேரம்:- சுபவேளை மு.ப. 10மணி தொடக்கம் 12 மணிவரை
இடம்:- பிரதானவீதி, பருத்தித்துறை.
பிரதம விருந்தினர்: திரு.ச.விஜேயகுமார் (ஜனனி நகைமாட உரிமையாளர்)
சிறப்பு விருந்தினர்: திரு.M.பரமானந்தம் (N.S.B முகாமையாளர்)
மங்கள விளக்கேற்றல்: சிறப்பு விருந்தினர்.
திறந்துவைப்பவர்:- பிரதம விருந்தினர்.
அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள், நலன்விரும்பிகள் அனைவரும் திறப்பு விழாவில் கலந்து நல்லாசிகள் வழங்கி எம்மை மகிழ்வித்து ஏகுமாறு அன்பாகக் கேட்டுக் கொள்கின்றோம்.
அதிநவீன டிஜிற்றல் கமரா மூலம் வீடியோப் படப்பிப்புக்கள்
கம்பியூட்டரில் வீடியோ மிக்ஷிங் செய்யவும்
பருத்தி நகரில் ஓர் சிறந்த ஸ்தாபனம்
T.P:- 2263523
Mobile:- 077 6099311
இங்ஙனம்: விஜி வீடியோ விஷன் ஸ்தாபனத்தார்

# செய்தித்துளிகள்

## நடமாடும் சேவை மூலம் கடன்

(காரைநகர்)

அண்மையில் இடம்பெற்ற ஊர்காவற்றுறை மக்கள் வங்கியின் நடமாடும்சேவை மூலம் காரைநகரில் 20 பேருக்கு தலா 25 ஆயிரம் ரூபா வீதம் கடன் வழஙகபபட்டுள்ளது.

காரைநகர் மத்தி கிராம சேவையாளர் பிரிவில் காரைகர் மத்தி மாதர் அபிவிருத்திச்சங்கத்தலைவி திருமதி.த. இராஜேஸ்வரி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், ஊர்காவற்றுறை மக்கள் வங்கியின் முகாமையாளர் எஸ்.சற்குணபாலன், காரைநகர் மத்தி கிராமசேவையாளர் எஸ்.கே. சிவலிங்கம் உட்பட வங்கி உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

சுய தொழிலில் ஈடுபட்டுள்ள மாதர் கிராம அபிவிருத்திச்சங்க உறுப்பினர்களுக்கே இவ்வாறான சுய தொழில் கடன்கள் வழங்கப்பட்டுளன. மக்கள் வங்கியின் நடமாடும் சேவை மூலம் கடன் வழங்குவது இலங்கையிலேயே இது முதல் முறை என ஊர்காவற்றுறை மக்கள் வங்கியின் முகாமையாளர் கூறியுள்ளார். (உ-246)

## பிள்ளைநேய பாடசாலைச் செயலமர்வு

(நெடுந்தீவு)

யுனிசெவ் அனுசரணையுடன் யாழ்.கல்வி வலய மண்டபத்தில் நாளை திங்கட்கிழமை காலை 8.45 ற்கு பிள்ளைநேய பாடசாலை செயற்திட்ட செயலமர்வு இடம்பெறவுள்ளது.

வலயக்கல்விப் பணிப்பாளர் பி. விக்கினேஸ்வரன் தலைமையில் நடைபெறும் இச் செயலமர்வில் தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (உ-48)

## மத்திய வங்கி முன்னாள் ஆளுநர் காலமானார்

(கொழும்பு)

முன்னாள் மத்திய வங்கியின் ஆளுநரும் பொருளாதார வித்தகருமான கலாநிதி வர்ணசேன இராசபுத்திரம் தனது 75வது வயதில் காலமானார்.

மாத்தறை புகுருவலையில் புகழ பெற்ற சிங்களக் குடும்பத்தில் பிறந்த இவர் ஐக்கிய நாடுகள் சபை, அமெரிக்கா, மலேசியா நாடுகளின் தூதுவராக கடமையாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-15)

## பஸ் குடை சாய்ந்துஇருவர்பலி

(கொழும்பு)

இலங்கைப் போக்குவரத்துத் திணைக்கள பஸ் வண்டி ஒன்று நேற்று முன்தினம் காலை மகியன்தனை ஆற்றுக்கு அருகில் குடை சாய்ந்ததில் அதில் பயணம் செய்த 2 பேர் உயிரிழந்துள்ளதுடன் 45 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் அனைவரும் கந்தகெட்டிய, மகியங்கனை வைத்தியசாலைகளில அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் இருவரது நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (தி)

## வரவேற்பும் பாராட்டிக் கௌரவிப்பும்

(காரைநகர்)

காரைநகர் பிரதேச செயலர். வே. சாம்பவத்தை வரவேற்றும் முன்னாள் ஊர்காவற்றுறை பிரதேச செயலரும் தற்போது காரைநகர் பிரதேச செயலருமான ஜே. எக்ஸ் செல்வநாயகத்தை பாராட்டிக் கௌரவித்து இன்று ஞாயிற்றுக்கிழமை காரைநகரில் கே.வி. குலரத்தினம் தலைமையில் விழா நடைபெறவுள்ளது.

இதில் கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரன், யாழ். அரச அதிபர் செ. பத்தமநாதன் ஆகியோர் பாராட்டுகளையும் நல்லை ஆதீன முதல்வர் சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் கலாநிதி வைத்தீஸ்வரக்குருக்கள் ஆகியோர் ஆசியுரைகளையும் வழங்கவுள்ளனர். (உ-246)

## முன்னாள் பொலிஸ்அதிகாரி கைது

(கொழும்பு)

அம்பலாங்கொடை பொலிஸ் நிலையத்தின் முன்னாள் தலைமைப் பொலிஸ் அதிகாரியை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்பு இடம்பெற்ற பொது ஜன ஐக்கிய முன்னணி உறுப்பினர் ஒருவரின் கொலை தொடர்பாக பொய்ச் சாட்சியம் புனைய எத்தனித்தார். என்ற சந்தேகத்தின் பேரிலேயே இரகசியப் பொலிஸார் இவரைக்கைது செய்துள்ளனர். (உ)

## சங்கர பாஷ்ய வகுப்புகள்

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ சிவகுரு நாத குருபீடத்தின் வேதாந்த மடத்தில் சனி, ஞாயிறு தினங்களில் மாலை 4 மணிக்கு ஸ்ரீ மத்சோமாஸ்கந்தவேள் சுவாமிகள் தலைமையில் சங்கர பாஷய வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றது.

இவ்வகுப்பிற்கு ஆர்வலர்கள் கலந்து கொண்டு பயன் பெற முடியும் என குரு பீடாதிபதி தெரிவித்துள்ளாா. (க-5)

## தமிழ் தினப் போட்டிகள் ஒத்திவைப்பு

(கொழும்புத்துறை)

எதிர் வரும் ஜூலை மாதம் 4,6,7 ஆகிய திகதிகளில் நடைபெற விருந்த மாவட்ட மட்ட தமிழ்த்தினப் போட் டிகள் பிற்போடப்பட்டுள்ளன.

இப்போட்டிகள், எதிர்வரும் 12, 13,14 ஆம் திகதிகளில் நடைபெறும் என யாழ். வலயக் கல்விப் பணிப்பாளா ப.விக்கினேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

எதிர் வரும் 12,13ஆம் திகதிகளில் மொழித்திறன் ,கலைத்திறன் போட்டிகள் யாழ் வேம்படி மகளிர் உயர் தரப்பாடசாலையிலும், திருக்குடும்ப கன்னியர் மடம், யாழ். மத்திய கல்லூரி ஆகியவற்றிலும் நடைபெறவுள்ளன.

அதேவேளை, ஏனைய போட்டிகள் 19ஆம் திகதியும் மாகாண மட்ட எழுத்துப்போட்டி, யாழ். வேம்படி மகளிர் கல்லூரியிலும் நடைபெறும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-51)

## கிணற்றுக்குள் வீழ்ந்த சிறுவன் மரணம்

(சில்லாலை)

தவறுதலாக கிணற்றில் வீழ்ந்த 6 வயது சிறுவன் பரிதாபமாக மரணமடைந்தான்.

வடலியடைப்பு அரசடி சந்திக்கு அண்மையில் கடந்த ஞாயிறன்று இடம்பெற்ற இச்சம்பவத்தில் இ. யசோதரக் (வயது 6) எனும் சிறுவனே மரணமடைநதுள்ளான்.

சம்பவதினமன்று கிணற்றடியில் தாயார் இவரை குளிப்பாட்டிக் கொண்டி ருந்தவேளை வாளிக்கயிறு சிறுவனின் காலில்சிக்கியதால் நிலை தடுமாறி கிணற்றினுள் விழுந்துள்ளார்.

இதை அவதானித்த தாயார் மகனைக் காப்பாற்றும் நோக்கில் தானும் கிணற்றினுள் குதித்துள்ளார். அருகிலிருந்த இராணுவ முகாமிலிருந்தவர்களுக்கு கிணற்றில் தத்தளிப்பு சத்தம் கேட்டதையடுத்து இராணுவ வீரர் ஒருவர் கிணற்றைசென்று பார்த்த வேளை தாயும் மகனும் கிணற்றினுள் தத்தளிப்பது தெரிந்து.

உடனடியாக அந்த இராணுவ வீரர் கிணற்றில் குதித்து இருவரையும் காப்பாற்றி அயலவரின் உதவியுடன் வைத்திய சாலைக்கு கொண்டு செல்லும் வழியில் சிறுவன் உயிரிழந்துள்ளான். தாயார் காப்பாற்றப்பட்டுள்ளார்.

இவர்கள் கைதடியிலிருந்து இடம் பெயர்ந்து வடலியடைப்பில் வசித்து வந்தவர்கள் என்றும் மரணமடைந்த சிறுவன் பண்டத் தரிப்பு மகளிர் கல்லூரியில் தரம்-1 ல் கல்வி பயின்று வந்தவர் என்றும் தெரிய வருகிறது. (உ-58)

## சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையில் 202 - 0801 இலக்கமுள்ள ஆட்டோவும் CJ 0381 இலக்கமுள்ள CD 125 மோட்டார் சைக்கிளும் விற்பனைக்குண்டு. கிருஸ்ணமூர்ததி (தேவி அச்சக ஒழுங்கை) யாழ்ப்பாணம். போன்:- 2789

(7202)

### மணமகன் தேவை

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பணிபுரியும் படித்த மணமகள்களுக்கு A/L படித்த அல்லது பட்டதாரி மணமகன்கள் உடன் தேவை. ஜாதகம், போட்டோ உட்பட உடன் தொடர்பு கொள்ளவும். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி நா.கந்தையா, சோமசுந்தரம்வீதி, ஆனைக்கோட்டை. (7205)


# தமிழரின் இயல்புவாழ்வை மீண்டும் கட்டிஎழுப்ப புலிகளிடம் அதிகாரம் கையளிக்கப்பட வேண்டும்

## பொங்குதமிழ் நிகழ்வில் எடுத்துரைப்பு

(யாழ்ப்பாணம்)

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகி பதினாறு மாதங்களுக்கு மேலாகிவிட்டது. காலம் கடந்து போயுள்ளது. நமது இயல்பு வாழ்வு இழுத்தடிக்கப்பட்டு, பேச்சுவார்த்தை இடைநின்று போய் உள்ளது. யுத்த மேகம் எம்மில் திணிக்கப்பட்டிருக்கின்றது. இந்நிலைமையை நாங்கள் மாற்ற விரும்புகின்றோம் இந்த நோக்கத்தோடு குடாநாட்டின் மூலை முடுக்குகளில் இருந்தெல்லாம் பொங்குதமிழராய் கிளர்ந்து வந்து இங்கு அணிதிரண்டுள்ளோம். நாம் இந்த உலகிற்கு ஒரு செய்தியை பிரகடனம் செய்கின்றோம்.

யாழ்.பல்கலைக்கழக மருததுவ பீட மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பொங்குதமிழ் நிகழ்வை ஒட்டி வெளியிட்ட அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட் டுள்ளது. அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

இனியும் எம்மால் இழுபட முடியாது.
'எங்கள் வீடுகளுக்கு நாங்கள் போகவேண்டும்,
உங்கள் வீடுகளுக்கு நீங்கள் போங்கள'

நமது இயல்பு வாழ்கையை நாம் கட்டியெழுப்பவேண்டும். அதற்கு வசதியாக தமிழர்களின் ஏகப் பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகளிடம் அதிகார பலம் பொருந்திய இடைக்கால அரசு ஒன்று கையளிக்கப்படவேண்டும். அந்த இடைக்கால அரசை சர்வதேச சமூகம் அங்கீகரிக்க வேண்டும்.

வடக்கும்-கிழக்கும் தமிழர்களின் பாரம்பரிய தாயகம். தமிழர்களின் தாயகத்திலிருந்து ஸ்ரீலங்கா இராணுவம் வெளியேறி தமது சொந்த ஊர்களுக்குத் திரும்ப வேண்டும்.

இராணுவ ஆக்கிரமிப்புக்குள்ளாகியிருக்கும் அச்சம் நிறைந்த இத்தகைய சூழலில் தமிழ்மக்கள் சமாதானம்பற்றி சிந்திக்கமுடியாது.

தமிழ்மக்கள் அச்சமற்ற சூழலில் சமாதான நடைமுறையில் செயல் முனைப்புடன் பங்குபற்றும் நிலைமை தோற்றுவிக்கப்பட வேண்டும். அத்தகைய ஓர் சூழ்நிலையில் தமிழர்களின் அபிலாசைகளான.

**தனித்தேசிய இனம், மரபு வழித தாயகம், சுய நிர்ணய உரிமை**

என்பவற்றின் அடிப்படையில் பேச்சு நடத்தப்பட்டு இனப்பிரச்சினைக்கு நீதியானதும், கௌரவமானதுமான ஓர் தீர்வு காணப்பட வேண்டும். அதனூடாகவே ஓர் நிரந்தர சமாதானம் சாத்தியம் என்பதை நாம் பிரகடனம் செய்கிறோம்.

**உயர்ந்தவர்கள் நாமெல்லோரும்**
**உலகத்தாய் வயிற்றுமைந்தர்**
**நசிந்து இனிக்கிடக்கமாட்டோம்**
**நாமெல்லாம் நிமிர்ந்து நிற்போம்**

என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

# மனித உரிமை மீறல்கள் இலங்கையில் கிடையாது

## இவ்வாறு கூறுகிறார் அமைச்சர் பீரிஸ்

(கொழும்பு)

பிரிட்டன் அரசாங்கம் தனது வைட் லிஸ்டில் இலங்கையைச் சேர்த்த செயலானது இலங்கையில் மனித உரிமைகள் பற்றிய எந்த விதமான பிரச்சினையும் இல்லை என்றும், இங்கு மனித உரிமைகள் நல்ல நிலையிலேயே உள்ளது என்பதைக் காட்டுவதாகவும் அமைகிறது என அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

மேலும் இச்செயற்பாடு இலங்கையைக் கௌரவிப்பதாகவே இருக்கி[illegible]ம் மனித உரிமைகளைப் [illegible]க்கும் நாடாக இலங்கையை [illegible] உயர்ந்த இடத்தில் வைத்[illegible] என்றும் தெரிவித்தார்.

அத்துடன், டோக்கியோ மாநாட்டில் இலங்கைக்கு வழங்குவதாக உறுதியளித்த தொகையை விட மேலதிகமாக இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு தொடர்ந்தும் உதவுவதாக பரிட்டனின் சர்வதேச அபிவிருத்திகளுக்கான அமைசசர் வலேரி அமோஸ் உறுதியளித்துள்ளார் என்றும் வாராந்த அமைச்சரவைக் கூட்டத்தில் தெரிவித்தார்.

இதைவிட இலங்கையின் பங்குச் சந்தையானது 1.5 பில்லியன் என்னும் மிக உயர்ந்த பெறுமானமாக இருப்பது இன்னுமொரு நல்ல அறிகுறி என்றும் இது இலங்கையின் வரலாற்றுச் சாதனையாகும் என்றும் அவர் தெரிவித்தார். (க)

# [illegible]தாள உலக கோஷ்டி நபர் [illegible]ழும்பு நீதிமன்றில் சரண்

(கொழும்பு)

பாதாள உலகத்தை சேர்ந்தவரும [illegible] கொள்ளை, கொலை சம்பவங்களுக்கு உடந்தையாக இருந்தவரென கருதப்பட்டவருமான தம்மிக என அழைக்கப்படும் தம்மிக அமரசிங்க நேற்று முன்தினம் கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் சரணடைந்துள்ளார்.

கொழும்பு நீதிமன்ற நீதிவான் திருபாலா மகாநாமாவிடம் நேற்று முன்தினம் பி.ப.2மணியளவில் சரணடைந்துள்ளார். இவரை ஜூலை மாதம் 11ம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

தனது உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதாகநீதிவானிடம் தெரிவித்த இவர், தன்னை கொழும்பு விளக்க மறியல் சிறைச் சாலையில்வைக்க வேணடாமென கேட்டுக்கொண்டதையடுத்து இவர் மகசீன் சிறைச் சாலையில் வைக்கப்பட்டுள்ளார்.

கடந்த அரசாங்க காலத்தின் போது நீர்கொழும்பை அண்டியுள்ள பிரதேசங்களில் இடம்பெற்ற பல கொள்ளை, கொலைச் சம்பவங்களுக்கும் இவருக்கும் தொடர்பு இருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். நீண்ட நாட்களாக பொலிஸாரால் தேடப்பட்டு வந்தவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.(க)

# கிண்ணியா கிரனேட் வீச்சு முடிவு எடுக்க முடியாத நிலையில்

## கண்காணிப்புக்குழு தெரிவிப்பு

(கொழும்பு)

திருகோணமலை கிண்ணியா பிரதேசத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையே அண்மையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் தொடர்பாக இறுதி முடிவு எதனையும் எடுக்க முடியாதுள்ளது என கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் எச்.பிரகாடிற்றி தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்; திருகோணமலை இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசத்தில் துப்பாக்கிச் சூட்டுப்பயிறசியில் ஈடுபட்டிருந்ததாக தமிழீழ விடுதலைப்புலிகளும், இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக இராணுவத்தினரும் முறைப்பாடு செய்துள்ளனர்.

எனினும், இப்பிரதேசத்துக்கு நேரில்சென்று பார்வையிட்ட கண்காணிப்புக்குழு உறுப்பினர்கள், இப்பகுதி யாருடைய கட்டுப்பாட்டுப்பிரதேசத்தில் உள்ளது என்பது குறித்து தீர்மானிக்க முடியாதுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை திருகோணமலை குரங்குபாய்ந்த குளத்தில் இராணுவத்தினருக்கும், தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கிரனேட் வீசசில் முடிவடைந்தமையும் தெரிந்ததே. (தி)




# கண்ணீர் அஞ்சலி

யாழ். போதனா வைத்தியசாலையில் கடந்த 32 ஆண்டுகளுக்கு மேலாக வேலைத்தள தொழில் நுட்பவியலாளராகக் கடமையாற்றிய

**இராசரத்தினம் மகேஸ்வரன்**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

போதனாவைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

பணிப்பாளர், அலுவலக
உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்.

(7209)


## உற்சவம் நாளைஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

அரியாலை வெட்டுக்குளம் அருள்மிகு ஸ்ரீபுவனேஸ்வரி அம்பாள்தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் நாளை திங்கடகிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

இவ் மஹோற்சவ காலங்களில் இரவு 6.30மணிமுதல் 7.30மணி வரை மதுரகவி காரை. எம்பி.அருளானந்தனின் தெய்வீக சொற்பொழிவு இடம்பெறும். (க)

## விசேட சொற்பொழிவுகள்

(யாழ்ப்பாணம்)

நயினை நாகபூசணி அம்மன் ஆலய வருடாந்த உற்சவம் இன்று ஆரம்பமாகிறது.

இன்றைய நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக சிரேஷட விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயத்தின் விசேட சொற்பொழிவும் நாளை காரை எம்.பி.அருளானந்தனின சொற்பொழிவும் இடம்பெற உள்ளன. (க)

## சைவசமயபாட கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

சைவபரிபாலனசபையினரால் தரம்1-5வரை சைவசமய பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு கல்வித்திணைக்கள அனுமதியுடன் சைவ சமய பாடக்கருத்தரங்கு பின்வரும் ஒழுங்குப்படி05 கல்விவலயங்களிலும் நடைபெறும்.

எதிர்வரும் 9ஆம்திகதி யாழ். வலயம், 11 ஆம் திகதி வடமராட்சி வலயம், 14 ஆம் திகதி சாவகச்சேரி வலயம், 16 ஆம் திகதி தீவக வலயம், 18ஆம் திகதி வலிகாமம் வலயம்.

காலை 9மணிக்கு கருத்தரங்கு ஆரம்ப மாகும். கருத்தரங்கில் பங்குபெறும் ஆசிரியர்கள் தரம்1-5வரை பாடநூல்களைக் கொண்டுவருமாறு தேர்வுச்செயலர் வ.கந்தசாமி கேட்டுள்ளார். (க)

## இன்று பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலையின் பரிசலிப்புநிகழ்வு இன்று பிற்பகல் 1.30 மணியளவில் மேறபடி பாடசாலையின் பிரதான மண்டபத்தில் இடம்பெற உள்ளது. (க)

## சாவகச்சேரியில் மகாகும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி ஸ்ரீதுர்க்கா தேவி தேவஸ்தான மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 2ஆம் திகதி புதன்கிழமை மு.ப. 9.27 மணிமுதல் 10.27 மணி வரை நடைபெறவுள்ளது.

நாளை மறுதினம் செவ்வாய்க் கிழமை பக்தர்களின் எண்ணெய்க் காப்பு இடம்பெறும். (க-8)

## யாழ்.பல்கலையில் நாளைகருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

'பாலஸ்தீன விடுதலைப் போராட்டமும், புதிய சமாதான முயற்சியும்' என்னும் தலைப்பிலான கருத்தரங்கு யாழ்.பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நாளை திங்கட் கிழமை பி.ப.3.00 மணியளவில் இடம்பெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக அரசறிவியலதுறை சிரேஷ்ட விரிவுரையாளா கே.ரீ.கணேசலிங்கம் சிறப்புரை ஆற்ற உள்ளார். (க)

# யாழ்.திரைஅரங்குகளில் இளைஞர் அட்டகாசம்

(யாழ்ப்பாணம்)

யாழ.குடாநாட்டில் திரை அரங்குகளில் இளைஞர்களின் அட்டகாசம் அதிகரித்து வருவதாக திரை அரங்கு உரிமையாளர்களால் வருத்தம் தெரிவிக்கப்படுகிறது.

இதுகுறித்து மேலும் தெரிய வருவதாவது; திரை அரங்குகளிற்குச் செல்லும் இளைஞர்கள் தரமற்ற தமிழர் கலாசாரத்திற்கு ஒவ்வாத ஆங்கிலத் திரைப்படத்தைப் பார்ப்பதில் கூடுதல் கவனம் செலுத்தி வருவதாகவும், இது முடியாதபோது திரை அரங்கு முதலாளிகளை அச்சுத்தும் வேலைகளில் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க-51)


# பனை அபிவிருத்திச் சபை

## கூறு விலை கோரல்

பனை அபிவிருத்திச் சபையின் காரைநகர் பல்தொழில் தொகுப்பு நிலைய 154'X40' அளவான கட்டிடம் அமைப்பதற்கு கூறுவிலை கோரப்படுகின்றது. சபையின் தலைமை அலுவலகத்தில் இதற்கான விண்ணப்பங்களைப் பெற்று 3.7.2003க்கு முன்னர் பு'ர்த்தி செய்து தரும்படி தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன். மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் தலைமைக் காரியாலயத்தில் தொழில்நுட்ப உத்தியோகத்தர் அல்லது கணக்காளரிடம் பெற்றுக்கொள்ளவும். விண்ணப்பம் ஒன்று 100/= செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

பனை அபிவிருத்திச்சபை,
இல. 53, கன்டி வீதி,
யாழ்ப்பாணம்.

தலைவர்
பனை அபிவிருத்திச் சபை.

(C/6365)

# பனிக்கட்டித் தொழிற்சாலை வெற்றிடங்கள்

யாழ். குருநகரில் அமைந்துள்ள எமது பனிக்கட்டித் தொழிற் சாலையில் பின்வரும் வெற்றிடங்களுக்குத் தகுதிவாய்ந்தவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01. குளிர்சாதனத் தொழில்நுட்பவியலாளர்கள் - Refrigeration Technicians**

மேற்கூறப்பட்டுள்ள வெற்றிடங்களுக்கு குளிர்சாதனத் தொழில்நுட்பத்துறையில் தொழில்நுட்பக் கல்லூரியில் பயின்று சித்தி பெற்றவர்களும், இத்துறையில் சில வருடங்கள் தொழில் புரிந்த அனுபவம் உள்ளவர்களும் விண்ணப்பிக்கலாம். அமோனியா வாயுவில் இயங்கும் சாதனங்களில் அனுபவம் உள்ளவர்களுக்கும் கடின உழைப்பாளிகளுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

**02. பொறியியல் தொழிநுட்பப் பயிலுனர்கள்-Trainee Technicians**

குளிர்சாதன தொழில் நுட்பத்துறையில் தொழிநுட்பக் கல்லூரியில் பயின்று சித்திபெற்றவர்கள் மேற் குறிப்பிட்ட வெற்றிடத்திற்கு விண்ணப்பிக்கலாம். தகுதி அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

**03. எலெக்ரிசியன்-Electrician**

N.C.T. Electrical Engineering இல் தேர்ச்சிபெற்று தொழில் நிறுவனங்களில் குறைந்தது 5வருடம் வேலைசெய்த அனுபவமுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

நற்சாட்சி விபரம் கோரக்கூடிய உறவினர் அல்லாத இருவான் பெயர் விலாசத்துடன் விண்ணப்பிக்கவும். விண்ணப்ப முடிவுத்திகதி 3.7.2003

தொடர்பு: இயக்குனர்
புறோமோட்டேர்ஸ் என்ஜினியரிங் கம்பனி லிமிடெட்
844 பருத்தித்துறை வீதி நல்லூர், யாழ்ப்பாணம்.

பிரதி பொது முகாமையாளர் (C/6364)

## இன்று ஒரு தகவல்

# திருட்டுப் புத்தி

''சார் இன்றைக்கு எங்கள் வீட்டிலே உங்களுக்கு சாப்பாடு'' என்று ஒருவர் சொன்னார். ''அப்படியா ரொம்ப சந்தோசம்'' அவசியம் வருகிறேன். இதற்கு இன்னொருவர் ''என்ன இது அந்த ஆள் கூப்பிட்டால உடனே ஒத்துக்கொள்கிறதா'' என்றார். உடனே இன்னொருவர் ஏன் ஏன் அப்படிச் சொல்கிறீர்கள் என்றார். ''அதற்கில்லை அந்த ஆள் நல்லவரில்லை'' என்றார். அவர் நல்லவர் இல்லை என்றால் எனக்கென்ன. அவர் வீட்டிலே சாப்பாடு நல்லாய் இருக்கும். அது நமக்குப் போதும். கூப்பிடுகிற ஆள் எப்படி என்றால் என்ன சாப்பிடுகிறது நல்லாய் இருக்கவேண்டும். அது தான் எனது கொள்கையென்றார். அதற்கு மற்றவர் இது நல்ல கொள்கையில்லை என்றார். நான் ஒரு கதை சொல்லுகிறேன். முன்பு ஒரு துறவி இருந்தார். அவர் ஊர் ஊராக சுத்தித்திரிவார். ஒரு நாள் ஒரு ஊருக்குப் போனார்.

அந்த ஊரிலே ஒருபணக்காரர் இருந்தார். அவர் இவரை விருந்துக்கு வரும்படி அழைத்தார். துறவியும் சம்மதித்து விருந்துக்குப்போனார். துறவியை வரவேற்றார் பணக்காரர். மிகவும் மரியாதையாகவும் பண்பாகவும் உபசரித்தார். துறவியும் வயிறார உண்டார். சாப்பிடும் போது துறவிக்கு பணக்காரர் வெள்ளிக்கூசாவில் குடிக்கத் தண்ணீர் கொண்டு வந்து வைத்தார். சாப்பாட்டை முடித்துக்கொண்ட துறவியார் தனது இருப்பிடத்திற்குச் சென்றார். அங்கு வழமையாகத் தன்னுடன் வைத்திருக்கும் துணிப்பையை அவிழ்த்தார். உடனே அவருக்கு ''திக்கென்டு'' தூக்கி வாரிப்போட்டது. என்ன ஆச்சரியம். அவர் சாப்பிட்ட இடத்திலே தண்ணீர் கொடுத்த அந்த வெள்ளிக்கூசா அங்கு இருந்தது. ஐயையோ ஏதோ ஞாபகத்திலே இதைத் திருடிக்கொண்டு வந்து விட்டேன் என்று பதறிப்போனார். இது எப்படி நடந்திருக்கும் என்று யோசித்தார். உடனே புறப்பட்டு அந்தப்பணக்காரர் வீட்டுக்குப்போனார்.

ஐயா! உங்களுக்கு இவ்வளவு செல்வம் எப்படி வந்ததென்று சொல்ல முடியுமா என்று துறவி கேட்டார். பணக்காரர் அங்குமிங்கும் பார்த்தார். சிறிது நேரத்தில் சுவாமி உங்களைப்போன்ற துறவிகளிடத்தே உண்மையைச் சொல்வதில் தவறேதும் இல்லை என நினைக்கிறேன். நானும் ஒரு காலத்திலே பணம் இல்லாமல் மிகவும் கஷ்டப்பட்டேன். ஒரு நாள் ஒருவருடைய மணி பேர்சைத் திருடினேன். அதிலே ஆயிரம் ரூபா இருந்தது. அந்த ஆயிரம் ரூபாவை முதலாக வைத்து இவ்வளவு பணமும் சேர்த்தேன். இருந்தாலும் அந்தத் திருட்டு இப்பவும் உறுத்திக்கொண்டுதான் இருக்கு. உடனே துறவி சொன்னார். நீங்க திருடிய பணத்திலே இருந்து சம்பாதித்த செல்வத்திலே எனக்குச் சாப்பாடு போட்டீர்கள். அந்தச் சாப்பாட்டை சாப்பிட்டதும் எனக்குத் திருட்டுப்புத்தி வந்து விட்டது. இந்தாருங்கள் உங்களுடைய வெள்ளிக்கூசா என்று அதைத் திருப்பிக் கொடுத்தார். இந்தக் கதையிலிருந்து ஒன்று புரிகிறது. உணவு எப்படி என்கின்றதை விட உள்ளம் எப்படி என்கிறது தான் முக்கியம்.

*தென்கச்சி கோ. சுவாமிநாதன்*

# ப.நோ. கூ. சங்கங்களுக்கு யு.என். டி.பி. நிதியுதவி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் உள்ள பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களையும் அதன் அங்கத்தவர்களையும் அபிவிருத்தி செய்யும் நோக்கில் யு.என். டி. பி. நிறுவனம் 5 பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு 32 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதியுதவியினை வழங்கியுள்ளது.

அண்மையில், யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் பருத்தித்துறை, புலோலி, வடமராட்சி கிழக்கு, கைதடி, சாவகச்சேரி பிரதேச பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள், பொது முகாமையாளர்கள், யாழ். கூட்டுறவுத் திணைக்கள அதிகாரிகள், யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபைத்தலைவர்கள் ஆகியோருடன் யு.என். டி.பி. உயர் அதிகாரிகள் நடத்திய சந்திப்பில் இந் நிதியுதவி வழங்கும் திட்டத் தினை யு.என்.டி.பி. உயர் அதிகாரி ஒருவர் அறிவித்துள்ளார்.

இந்நிறுவனம் வழங்கவிருக்கும் நிதி உதவியைக்கொண்டு விவசாயம், சிறு கைத்தொழில், கால் நடை வளர்ப்பு, கடற்றொழில் ஆகிய துறைகளுக்கு தொழில் முயற்சிக்காக சுழற்சி முறைக்கடன் அடிப்படையில் சங்க அங்கத்தவர்களுக்கு வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனடிப்படையில், கடந்த கால யுத்த அனர்த்தங்களால் பாதிப்புற்றிருக்கும் வடமராட்சி கிழக்கு, கைதடி, சாவகச்சேரி பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு தலா 7 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், பருத்தித் துறை, புலோலி, பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு தலா 5 இலட்சம் ரூபாவும் வழங்குவதென இக்கூட் டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே இந்நிறுவனம் யாழ். மாவட்டத்திலுள்ள 17 கூட்டுறவுச் சங்கங்களுக்கு 1 கோடி 50 இலட்சம் ரூபாவை 3194 சங்க அங்கத்தவர்களுக்கு கடனாக வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-15)

# வடக்கில் மீள் குடியமரும் முஸ்லிம்களின் பாதுகாப்பை அரசு உறுதிப்படுத்தவேண்டும்

## யாழ்.மக்கள் பணிமனை அறிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மக்கள் பணிமனையின் செயற்பாடுகள்ஆரம்பிக்கப்பட்டதையொட்டி மேற்படி பணிமனை நேற்று முன்தினம் அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில்,

1990 ஒக்டோபரில் யாழிலிருந்து வெளியேற்றப்பட்டு வடக்குக்கு வெளியே அகதிகளாக பல துன்பங்களை அனுபவித்த மக்கள் தற்போது ஏற்பட்டுள்ள யுத்த நிறுத்த உடன்பாட்டையடுத்தும், பிரபா- ஹக்கீம் கூட்டறிக்கையைத் தொடர்ந்தும், விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன், கலாநிதி அன்ரன் பாலசிங்கம், அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச் செல்வன் உட்பட பலரும் வழங்கியுள்ள உறுதி மொழிகளையடுத்தும், யாழ். கிளிநொச்சி மாவட்ட முஸ்லிம் மக்களில தானாக விரும்பி மீள தங்களது சொந்தப் பிரதேசத்தில், தாயக மண்ணில் மீளக் குடியேறி வரும் மக்களுக்கு தனது சேவையை ''மக்கள் பணிமனை'' ஆற்றுவதற்காகவும் இதன் செயற்பாடுகள் இன்று யாழ்ப்பாணம் 83, நாவலர் வீதியில் இதன் தலைவர் மௌலவி பீ.ஏ.எஸ்.சுப்யானால் ஆரம்பித்து வைக்கப்படுகின்றன.

இச் சந்தர்ப்பத்தில் இம்மக்களுக்காக மேற்கொள்ளப்படும் புனர்வாழ்வு, புனர் நிர்மாணப்பணிகளை வடமாகாண புனர்வாழ்வு அமைச்சு, வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகார சபை, அத்தியாவசிய சேவைகள் அலுவலகம், யாழ். அரசாங்க அதிபர், சிரான், பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள், உள்நாட்டு மற்றும் சர்வதேச நிவாரண நிறுவனங்களும் ஒருங்கிணைந்து மேற்கொள்ளப்படுவதை அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும்.

இம் மக்களுக்கு பூரண பாதுகாப்பு, திருப்திகரமான உறை விடம், சுகாதார வசதிகள், போஷாக உணவுகள், தொழில் முயற்சிகளை ஊக்குவித்தல் போன்றவைகள் வழங்கப்படுவதை உறுதி செய்யப்படுவதற்கும் அரசங்கம் முக்கியத்துவமளிக்க வேண்டும்.

இம்மக்களின் மீள் குடியேற்றம் நம்பிக்கைத்தரும் வகையில் அமைவதற்கு அரசாங்கம், விடுதலைப் புலிகள், சர்வதேச சமூகம் குறிப்பாக இலங்கையின் சமாதான முன்னெடுப்புக்களில் பங்குதாரர்களாக செயற்படும் நோர்வே, ஜப்பான் மற்றும் ஏனைய உலக நாடுகளும் பூரணமாக ஒத்துழைக்க வேண்டும் என இம்மக்கள் எதிர்பார்க்கின்றனர் என்றுள்ளது. (உ)

## இராசி பலன்

**29. 06. 2003**
**(ஆனி 15, ஞாயிறு)**

| | |
|---|---|
| அமாவாசை | மு.இ.10.28 வரை |
| மிருகசீரிடம் | மு.ப. 11.15 வரை |
| இராகுகாலம் | 4.26-5.56 |
| சுபநேரம் | 8.56-10.26 |

அமாவாசை விரதம்

**மேடம்**
நற்கீர்த்தி, மனோதைரியம், எடுத்த காரியம் கைகூடும், தன வரவு.

**இடபம்**
போசன சுகம், கௌரவக்குறைவு, காரிய தாமதம், அதிக செலவு.

**மிதுனம்**
வெகுமானம், கற்பனைமிகுதி, எடுத்த காரியம் கைகூடும், கௌரவமான நிலை.

**கடகம்**
அமைதிக்குறைவு, சோம்பல் நிலை, காரிய தாமதம், கீழ்ப்படிதல்.

**சிங்கம்**
நினைத்த காரியம் கைகூடும், நண்பர்கள் நல்வரவு, பொருள்சேர்க்கை, இனிய சம்பவம்.

**கன்னி**
நன்கொடை, ஆரோக்கியம், இஷ்ட சித்தி, எடுத்தகாரியம் கைகூடும்.

**துலாம்**
சரீரப்பிரயாசை, தேசாந்திர வாசம், எதிர் பாராத செலவு, நிர்ப்பந்தம்.

**விருச்சிகம்**
எதிர்பாராத பிரச்சினை, காரியதடங்கல், மனக்கவலை, அஜீரணக்கோளாறு.

**தனுசு**
சௌபாக்கியம், சிந்தனை மிகுதி, முயற்சி பலிதம், தெய்வ தரிசனம்.

**மகரம்
**தடைப்பட்ட காரியம் கைகூடும், நோய் குணமடைதல், மனமகிழ்ச்சி, தனவரவு.

**கும்பம்**
ரோக நிலை, காரிய இடையூறு, தொழிலில் புதிய திருப்பம், குடும்பக்கவலை.

**மீனம்**
புத்தி சஞ்சலம், எடுத்தகாரியம் தாமதமாகும், போசன சுகம், தனவிரயம்.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

- வளவன்.

# இளைஞர் அபிவிருத்திக்கு 50 இலட்சம் நிதி ஒதுக்கீடு

(கொழும்பு)

வடக்கு -கிழக்கு மாகாணத்தில் இளைஞர் திட்டங்களை அபிவிருத்தி செய்வதற்கு 50 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

மாகாண சபை ரீதியாக ஒதுக்கப்படவுள்ள இப்பணம், இன ஐக்கியத்தையும், நட்புறவையும்வளர்த்துக் கொள்வதற்கு பயன்படுத்தப்படும் என தேசிய இளைஞர் விவகார சங்கத்தின் வடக்கு பொறுப்பான எஸ். தயானந்தன் தெரிவித்துள்ளார்.

இந் நிதி மூலம் இளைஞர் யுவதிகளுக்கு தமிழ், சிங்கள, ஆங்கில மொழிகளை கற்பிக்க திட்டமிடப்பட்டுள்ளதுடன், விளையாட்டு உபகரணங்கள் நூலகவசதிகள் மற்றும் தொழிற் பயிற்சிகள் என்பனவும் வழங்கப்படவுள்ளன.

இத்திட்டம் எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்தில் இருந்து அமுல்படுத்தப்படவுள்ளது. (தி)

## மூவின மக்களின் சமாதானப் பேரணி

# வவுனியாவில் நாளை மறு தினம் நடாத்த விரிவான ஏற்பாடு

(கொழும்பு)

சமாதானத்தைப் பெற்றுத்தருமாறு கோரி வவுனியாவில் நாளை மறு தினம் செவ்வாய்க்கிழமை மூவின மக்களையும் கொண்ட அமைதிப் பேரணி ஒன்றை நடத்த மக்கள் சமாதான அமைப்பு தீர்மானித்துள்ளது.

அதற்கமைய நாளை மறுதினம வவுனியா குடியிருப்பு பிள்ளையார் கோவில், குருமன்காடு காளிகோவில, கண்டிவீதி பௌத்த கோயில், பள்ளிவாசல் ஆகிய இடங்களில் இருந்து பேரணிகள் ஆரம்பமாகவுள்ளன. இப்பேரணியில் கலந்து கொள்ளும் மூவின மக்களும் வவுனியா நகரைச்சென்றடைந்து ஒன்று கூடி பின்னர் வவுனியா அரச செயலகத்திற்குச் சென்று அரசாங்கத்திற்கான மனுவென்றை கையளிக்கவுள்ளனர். (க-10)

## தனியார் பஸ் சாரதிகள்

# கொழும்பில் நேற்று முன்தினம் வேலைநிறுத்தப் போராட்டம்

## நேரக்கணிப்பாளர் தாக்கப்பட்டதன் எதிரொலி

(கொழும்பு)

கொழும்பு மற்றும் கண்டிப் பகுதியில் உள்ள சகல சொகுசு பஸ் சாரதிகளும் நேற்று முன்தினம் திடீர் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

அண்மையில் கண்டி மத்திய பஸ் நிலைய நேரக்கணிப்பாளர் ஒருவரை இனந்தெரியாத சிலர் தாக்கிய சம்பவத்தைக்கண்டித்தே இந்தப் போராட்டம் நடைபெற்றதாகவும், இப் போராட்டம் மேற்படி பஸ் நேரக் கணிப்பாளரை தாக்கியதாகக் கூறப்படும் சந்தேக நபர்கள் கைது செய்யபபடும் வரை தொடரும் எனவும் பஸ் சாரதிகள் கூறியுள்ளார்கள்.

இதே சமயம் இவர்களின மேற்படி வேலை நிறுத்தப்போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் கொழும்பு, கம்பளை, மாத்தறை ஆகிய பகுதி களில் உள்ள சொகுசு பஸ் சாரதிகளும நேறறு முன்தினம் ஒரு நாள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். (க-10)

# இளைஞர் படைக்கு ஆட்சேர்ப்பு தகுதியானோர் விண்ணப்பிக்கலாம்

(கொழும்பு)

இளைஞர்படைக்கு அங்கத்தவர்களைச்சேர்த்துக்கொள்ளும் திட்டம் தற்போது ஆரம்பமாகியுள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

அத் தகவல்கள் மேலும் தெரிவிக்கையில்; அதற்கமைய அனைத்து மாவட்டங்களிலும் குறித்ததேர்தல் தொகுதியில் நிரந்தரமாகவசிக்கும் 18 வயது முதல் 22 வயது வரையான இளைஞர் யுவதிகள் இதற்கு விண்ணப்பிக்கலாம்என தெரிவிக்கப்பட்டுள்ளது.

க.பொ. த. சாதரண தர பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்

எனவே, இப்பதவிக்கு விண்ணப்பிக்க விரும்பும் இளைஞர்கள், யுவதிகள் தமது பிரதேச செயலகங்களில் இதற்கான படிவத்தைப்பெற்று எதிர் வரும் ஜூலை மாதம் 21ஆம் திகதிக்கு முன்னர் 'பணிப்பாளர், இளைஞர் படை, த. பெ.எண் 530 கொழும்பு என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்றும், மேற்படி பதவிக்கான விண்ணப்பத்தினை அனுப்பும் கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் ' யூத் ரேஞ்ஜர் 'எனவும் வதியும் தேர்தல் தொகுதியின் பெயரும் கட்டாயமாக எழுத வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க.10)

# பத்திரிகையாளர்களுக்கு அச்சுறுத்தல் கொழும்பில் ஆர்ப்பாட்டப் பேரணி

(கொழும்பு)

பத்திரிகையாளர் மீது பாதாள உலகக் குழுவினர் விடுக்கும் கொலை அச்சுறுத்தலைக் கண்டித்து எதிர் வரும் 2ஆம் திகதி புதன்கிழமை கொழும்பு கோட்டை பேருந்து நிலையத்திற்கு முன்பாக அனைத்து பத்திரிகையாளர்களும் இணைந்து கண்டனப் பேரணி ஒன்றை நடத்தவுள்ளனர்.

கொழும்பு பத்திரிகையாளர் சங்கத் தலைவர் தயா பெரேரா தலைமையில் நண்பகல் 12 மணிக்கு ஆரம்பமாகும் இப்பேரணி, பி.ப.2 மணி வரை நடைபெறவுள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, கொழும்பில் வேலை வாய்ப்பைப் பெற்றுத் தருவதாக போலி விளம்பரம் செய்து பல லட்சம் ரூபாவை கொள்ளையடித்த நபர் ஒருவரைப் பற்றிய செய்தி வெளியிட்ட பத்திரிகையாளர் ஒருவரிற்கு பாதாள உலகக் குழு வைச் சேர்ந்த நபர் ஒருவர் கொலை அச்சுறுத்தல்விடுத்ததாகவும்.

இது பற்றி பொலிஸில் சம்பந்தப்பட்டவர் முறையிட்ட போது பொலிஸார் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என பத்திரிகையாளர் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. (க-10)

தக்காரினந் தனாய்ந் தாவொழுக வல்லானைச்
செற்றார்செயக் கிடந்ததில் – குறள்

வலம்புரி

## அரசாங்கம் சிந்திக்க வேண்டும்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக சமூகம் நடத்திய பொங்கு தமிழ் நிகழ்வில் இலட்சோப இலட்சக்கணக்கான தமிழ் மக்கள் கலந்து கொண்டு தங்கள் உணர்வினை வெளிப்படுத்தியுள்ளனர்.

எங்கள் மண்ணில்-எங்கள்வீடுகளில் நாம் குடியிருக்க வேண்டும். அதற்காக எமது இடங்களை ஆக்கிரமித்துள்ள இராணுவம் அவ்விடங்களை விட்டு விலக வேண்டும் என்ற தொனிப் பொருளை மையமாகக் கொண்டு இடம் பெற்ற பொங்கு தமிழ் நிகழ்வில் இலட்சக் கணக்கான மக்கள் திரண்டெழுந்து தமது கோரிக்கையை வெளிப்படுத்தியுள்ளனர் எனில் அரசாங்கம் இதனை வெறுமனே அலட்சியப்படுத்தி விடக்கூடாது.

ஜனநாயக வழியில் மக்கள் தமது மனக்குறையை அரசாங்கத்துக்கு எடுத்துக் கூறியுள்ளனர். பொங்கு தமிழ் என்பது ஏதோ போரை வரவேற்கும் நிகழ்வெனக் கற்பனை செய்தவர்கள் இப்போது உண்மையை உணர்ந்துள்ளனர்.

அரச பிரதிநிதிகளுக்கும் அழைப்பு விடுத்து, தமது கோரிக்கையை பாருங்கள். இராணுவத்தை எமது தாயகத்தில், மக்களின் குடியிருப்புகளில் தங்க வைத்தால் நாங்கள் எங்கே போவது? இடம் பெயர்ந்த முகாம்களில் எங்கள் வாழ்க்கை கழிந்து போவதா? இதற்கு முடிவே இல்லையா? இனியும் பொறுக்க முடியாது.

நாங்கள் எங்கள் வீடுகளுக்கு போவதற்காக அன்பார்ந்த இராணுவத்தினரே நீங்கள் உங்கள் வீடுகளுக்குச் செல்லுங்கள், இதனை நாம் ஆயுதரீதியில் கேட்கவில்லை. அகிம்சை வழியில் நின்று கேட்கிறோம். எங்கள் உணர்வுகளை நீங்கள் புரிந்து கொள்ளுங்கள்.

இவ்வாறு பொங்கு தமிழ் நிகழ்வில் கலந்து கொண்ட ஒவ்வொரு தமிழ் மகனும் தமது உள்ளத்து உணர்ச்சியை வெளிப்படுத்தி உள்ளனர். இதனை அரசாங்கம் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும்.

சிங்களவர்களோடு போர் புரிய வேண்டும் என்பது தமிழ மக்களின் நோக்கமல்ல. தங்களின் சொந்த மண்ணில் சுதந்திரமாக வாழவேண்டும் என்பதே அவர்களின் விருப்பமாகும். இது நியாயமான விருப்பமும் கூட. இதனை ஏற்க அரசு மறுக்குமாயின் பொங்கு தமிழ் நிகழ்வில் பொங்கிப் பிரவாகித்த உணர்வுகள் போர்க்களம் செல்வதற்கே வழிவகுக்கும்.

மக்களின் நியாயபூர்வமான உணர்வுகளை உரிய வழியில் ஆற்றப்படுத்துவதே அரசாங்கத்தின் தார்மீகக் கடமை. இதனை விடுத்து மக்களின் உணர்வுகளை அரசு அடக்க முற்படும் போது அதன் வேகம் வெடித்து எழுமானால் அதனை அணை போட்டுத் தடுக்க யாராலுமே முடியாது போய்விடும்.

# துன்புறும் உள்ளங்களை ஆற்றுப்படுத்தலே இறைவன் விரும்பும் உண்மை நோன்பாகும்

அனபுப்பாதையல் சென்றால் அருளின் நிறைவை அடைவோம். அழிவுப்பாதையில் சென்றால் பாவ இருளில் சிக்கித்தவிப்போம். அருளின வழியில் வாழ்ந்தால் ஆண்டவர்பால் ஞானத்தைப் பெறுவோம். எனவே ''பயபக்தியுடன் அவர் வழியைப் பின்பற்றவேண்டும் ஏனெனில அதுவே ஞானத்தின் நிறைவு'' (சீராக்1-16) ஆகவே இறைபக்தி எம்மில் வெளிப்பட வேண்டும். எட்டுத் திக்கிற்கும் மீட்பளிக்க வந்த தேவன இயேசுக்கிறீஸ்துவின் பாடுகள், மரணம், உயிர்ப்பைத் தியானித்த நாம் பாடுகள் படுகின்றோமா? எமக்குள் இருக்கினற பாவங்களை மரணிக்க வைத்து புதிய உள்ளங்களை புதிப்பிக்கின்றோமா? மனமாற்றத்துடன் வாழ்வை தொடர்கிறோமா மனிதன் பலவீனன். பாவச்சகதிக்குள் தத்தளிக்கின்றான். மனம் தான் அவனை நிலைகுலையச் செய்கின்றது.



## பரமபிதா காட்டிய பாதை

இவ்வாறான பின்னடைவுகளில் இருந்து விடுதலைபெற செபங்கள் தவமுயற்சிகள், தியானங்கள், தியாகங்கள் செய்து உண்மை நோன்பின் வலிமையால் அமைதியிழந்த உள்ளங்களை ஆற்றுப்படுத்த முடியும். எனக்குள் அமைதி ஏற்படாமல் மற்றவர் அமைதிபற்றி நான் பேசமுடியாது. நோன்பு என்கின்ற போது வாழ்கையிலே தூய்மையைப் பேண வேண்டும். சிறைச்சாலை, அகதிமுகாம்கள், முதியவர் இல்லம் மருத்துவ மனை,உடல் உளம் பாதிக்கப்பட்டோரில்லம் அநாதைச்சிறுவர் இல்லம் போன்றவற்றிற்கு நாம் சென்று அங்கே துன்புறும் உள்ளங்களை ஆறுதல் படுத்துவதே ஆண்டவன் விரும்புகின்ற உண்மையான நோன்பு

பெயரளவில் வெளித்தெரியும் படியாக நமது நோன்பு முயற்சிகளை விளம்பரப்படுத்தாமல் எங்களுக்குள்ளேயே வைத்து ஆத்ம சிந்தையுடன் தவிக்கும் உள்ளங்களை மகிழ்ச்சிப்படுத்தி நம்பிக்கையை அவர்களிற்கு ஏற்படுத்த வேண்டும். இதை எசாயா இறைவாக்கினர் உரைக்கையில் ''கொடுமைத்தளைகளை அவிழ்ப்பதும் நுகத்தின் பிணையல்களை அறுப்பதும் ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்புவதும் பசித்தோர்க்கும உங்கள் உணவுவைப்பகிர்ந்து கொடுப்பதும் தங்க இடமில்லாதோரை உங்கள் வீட்டில் அழைத்து வருவதும், உடையறறோருக்கு உடுக்கக் கொடுபபதும் உங்கள் இனத்தாருக்கு உங்களை மறைத்துக் கொள்ளாதிருப்பதுமன்றோ நான் விரும்பும் உண்மையான நோன்பு'' என்றார்.

மண்ணில் மனித பாவங்கள் பல்கிப் பெருகியதால் இறைமகன் கிறிஸ்து மானிடராய் அவதரித்தார். பாவத்தின் பிடியில் சிக்குண்டவர்களை மீட்கவும் விடுதலை கொடுக்கவும் இறைமகன் சித்தம் கொண்டார். இதற்கமைவே மருத்துவன் நோய் அற்றவனுக்கன்று மாறாக நோய் உற்றவனுக்கே என்று பாவிகளை ஏற்று அவர்களுக்கு மகிழ்வையும் விடுதலையும் கொடுத்து வந்தார். ஓய்வு நாட்களை மனிதர்களுக்காக்கி மனிதன் ஓய்வு நாளுக்கல்ல என்று புதுமைகள் பலபுரிநததுடன் யூத மதச்சட்டங்களை கிறிஸ்து அவமதிக்கின்றார். பதவியாசை பிடித்த சுயநல யூதத்தலைவர்கள் ஜேசுவைச் சிலுவையில் அறைந்தார்கள். எம் அக்கிரமங்களுக்காகவே அவர் ஒடுக்கப்பட்டார் எம் பாவங்களுக்காகவே அவர் பாடுகள் பட்டார். எம்மீது கொண்ட அன்பினால் உயிரையே கொடுக்கத் துணிந்தார். இன்றும் நாங்கள் தனிப்பட்ட பாவங்களால் ஜேசுவை சிலுவையில் அறைந்து கொண்டு தான் இருக்கின்றோம். போட்டி பொறாமை சுயநலம் போன்றவற்றால் எத்தனையே உயிர்களைக் கூட கொலைசெய்ய துணிகின்றோம் எமக்குள் ஜேசுவின் சாயல்கள் ஊடுருவிப்பாவங்கள் தீரவேண்டும் அப்போதுதான் எம்மனங்கள் அமைதிபெறும். புத்துயிர் பெறும். கிறிஸ்து ஜேசுவின் உயிர்ப்புக் கூட அர்த்தமுள்ளதாக மாறும். கடவுளை தேடி கத்திகளொடும் அமைதியைத் தேடி துவக்குகளோடும் விடியலை தேடி விரோதங்களோடும் நாம் பயணிக்கின்றோம். ''வாளெடுத்தவன் வாளினாலே மடிவான்''என்ற கூற்றிக் கிணங்க துன்புறுத்தும் ஆயுதங்கள் பாவ நினைவுகள் யாவற்றையும் கீழே போட்டு விட்டு துன்புற்று கொண்டிருக்கின்ற மனிதர் நடுவில் வாழ்கின்ற கடவுளைத் தேடி புறப்படுடவோம்

இறைவன் அவன் கேட்காமலே கொடுக்கின்றான் எனவே பிறருக்காகச் செபிப்போம். செயற்படுவோம் இறை அருளைப் பெற்று வாழ்வோம். □

ஜோ.ஜெஸ்ரின்

# மட்டு.கல்லடி முகாமை பலப்படுத்த பாதுகாப்பு அமைச்சு முயற்சி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் முதலாவது நிரந்தர இராணுவ முகாமாக கல்லடி இராணுவ முகாமை மாற்றுவதற்கு பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

நிரந்தர முகாம் அமைப்பதற்காக தற்பொழுது கல்லடி இராணுவ முகாம் அமைந்துள்ள பகுதியில் இருக்கும் அரச காணிகளை சுவீகரிப்பதற்கு பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

1982-ம் ஆண்டு அவசர காலச் சட்டம் அமுலில் இருந்த காலப் பகுதியில் கல்லடி கிராம அபிவிருத்தி பயிற்சி நிலையக் கட்டடத்தில் அமைக்கப்பட்ட இவ்இராணுவ முகாம் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான 19 விடுதிகள் மற்றும் அரச மதுவரித் திணைக்களம்,இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் போன்றவற்றிற்கும் விஸ்தரிக்கப்பட்டது.

நிரந்தர இராணுவ முகாம் அமைப்பதன் முதற்கட்டமாகத் தற்பொழுது இராணுவ முகாம் அமைந்துள்ள பகுதியில் உள்ள வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான கட்டடங்களின் பெறுமதியை மதிப்பீடு செய்து சமர்ப்பிக்குமாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோ வீடமைப்பு அதிகார சபைக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.சன நெரிசல் மிக்க இந்தப் பிரதேசத்தில் நிரந்தர இராணுவ முகாம்அமைவதால் அதியுயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் அப்பகுதியிலுள்ள ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வெளியேற வேண்டியேற்படலாம் எனத்தெரிவிக்கப்படுகின்றது.

(ந-5)

# தீயசக்திகளின் பொய்ப் பிரசாரத்தை பொது மக்கள் நம்பிவிடக் கூடாது

## கொள்கைத்திட்டமிடல் அமைச்சின் ஆலோசகர் தெரிவிப்பு

(கொழும்பு)

சமாதான பேச்சு வார்த்தைகளின் தற்காலிக இடைநிறுத்தத்தை காரணம் காட்டி சில தீய அரசியல் சக்திகள் அவசியமற்ற பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாக கொள்கைத்திட்டமிடல் அமைச்சின் ஆலோசகர் அலுசாகீர் மௌலானா தெரிவித்துள்ளார்.

ஏறாவூர்ப் பிரதேசத்தில் புதிதக அமைக்கப்பட்ட விளையாட்டு அரங்கைப் நேற்று முன்தினம் திறந்து வைத்து உரையாற்றும் போது இவ்வாறு தெரித்துள்ளார்.

அங்கு தொடர்ந்து பேசிய அவர் சமாதான முயற்சிகளை குழப்ப திட்டமிட்டுச் செயற்படும் இவ்வாறான சக்திகளின் பொய்ப் பிரசாரத்தை பொதுமக்கள் நம்பக் கூடாது.

பிரதமர் ரணில் விக்கிரம சிங்கா தலைமையிலான அரசாங்கம் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் நம்பிக்கை வைத்து மீண்டும் அதனை தொடர்வதற்கு உரிய நடவடிக்கைகளில் தற்போது ஈடுபட்டு வருகின்றது

தமிழீழ விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்கால நிர்வாக சபைக் கோரிக்கையை அரசு நிறைவேற்றுவதாக உறுதியளித்தால் பேச்சு வார்த்தைகளை மீண்டும் தொடர முடியுமென அவர்கள் அறிவித்துள்ளனர்.

நாட்டில் மீண்டுமோர் யுத்த சூழ்நிலையை ஏற்படுத்துவதில்லை என்பதில் அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் உறுதியாக உள்ளனர்.

இந்நிலையில் சில தீயசக்திகள் யுத்தத்தை தூண்டிவிடும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாகவும் இவ்வாறான சதிவலைகளில் மக்கள் சிக்கிவிடக் கூடாது எனவும் அவர் கேட்டுக் கொண்டார்.

(தி)

## தினசரி தியானம்

### அருள் மழை

சூரியன் மாலையில் மறையும் போது தன்னுடைய பல கதிர்களையும் சிவந்த கீழ்வானத்தில் ஒன்று சேர்க்கின்றான். அதுபோல உங்கள் மனதில் சிதறிக் கிடக்கின்ற அழியக் கூடிய பல்வேறு எண்ணங்களை ஒன்று சேர்த்து பெருமைக்குரிய இறைவனது தாமரைத் திருவடிகளில் சமர்ப்பியுங்கள். பிறரது நலத்துக்காகவும், வளத்துக்காகவும் பிரார்த்தியுங்கள். நாட்டில் அமைதியும், செழிப்பும் நிலவும். கருணை, ஒளி, தூய்மை, வலிமை ஆகியவை வளர்ந்தோங்கவும் துதியுங்கள். இறைவனுக்கு இதயத்தைத் திறந்து விடுங்கள் புகழுக்குரிய இறைவன் தன் அருள் மழையை உங்கள் மேல் சொரியக்காத் திருக்கிறான்.

சுவாமி சிவானந்தர்

# அஸ்ரா வெற்றிக் கிண்ணப் போட்டியில் யாழ்.மத்திய கல்லூரி சாதனை

(யாழ்ப்பாணம்)

யாழ்மத்திய கல்லூரியின் 14 வயதிற்குட்பட்ட கிரிக்கட் அணி வீரர்கள் இருவர் புதிய சாதனை ஒன்றை நிலைநாட்டியுள்ளனர்.

அஸ்ரா வெற்றிக் கிண்ணத் திற்காக நேற்று ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்கு எதிராக நடைபெற்ற ஆட்டத்திலேயே இச்சாதனையை நிலைநாட்டியுள்ளனர்.

முதலாவது இனிங்சில் மத்திய கல்லூரியணி 4 விக்கெட்டுக் களை இழந்து 31 ஓட்டங்களை மட்டும் பெற்றிருந்த வேளை அணியின் வீரர்களான எஸ்.செல்ரன், ரீ.டயான் ஆகிய இருவரும் இணையாட்டமாக 248 ஓட்டங்களைப் பெற்று சாதனை நிலைநாட்டினர்.

வடக்கில் 14 வயதினருக்கான கிரிக்கட் போட்டியில் இத்தகைய ஓட்டங்களை பெற்றமை இதுவே முதற்தடவையாகும்.

இதேவேளை கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்திற்கு எதிரான போட்டியில் அணித்தலைவர் ஆர்.டானியன் சதத்தைப் பெற்றுக் கொண்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

(இ-5)

# தமிழ்த் தம்பதியினரிடம் 17 லட்சம் ரூபா கொள்ளை!

## தெஹிவளையில் திகில் சம்பவம்

(கொழும்பு)

கொட்டாஞ்சேனையில் இருந்து தெஹிவளைக்குச் சென்ற தமிழ் தம்பதியினரிடமிருந்து 17 இலட்சம் ரூபா கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

வீடொன்றை வாங்கும் நோக்கில் பணம் கொண்டு சென்ற தம்பதியரே இவ்வாறு பணத்தை பறி கொடுத்தவர்கள் ஆவர்.

மோட்டார் சைக்கிளில் மனைவியையும் ஏற்றிக் கொண்டு தெஹிவளையில் உள்ள உறவினரின் வீட்டுக்கு பணம் கொடுப்பதற்காக பிரஸ்தாப தம்பதியர் சென்ற கொண்டிருந்த வேளை, அவர்களுக்குப் பின்னால் ஓட்டோ ஒன்றில் தொடர்ந்து சென்று கொண்டிருந்த மூன்று பேர் அடங்கிய கொள்ளையர்களே பணத்தைப் பறித்துக் கொண்டு தலைமறைவாகியுள்ளனர்.

மேற்படி உறவினரின் வீட்டுக்கு முனனால் மோட்டார் சைக்கிளை நிறுத்தி விட்டு,மனைவியிடம் 17 இலட்சம் ரூபாவை கொடுத்து விட்டு கணவர், உறவினர் வீட்டுக் குள்ளே சென்ற வேளை ஓட்டோவில வந்த கொள்ளையர்கள் மனைவியிடம் பணத்தை பறித்துக் கொண்டு தப்பி விட்டனர்.

இதேவேளை பொலிஸார் ஓட்டோச் சாரதியை கைது செய்து உள்ளனர் எனினும் இதுவரை கொள்ளையர்கள் கைது செய்யப் படவில்லை. (இ)

## மொறட்டுவவில்...

பிஸ்டல் குழுவினரும் குண்டுதாரிகளும் தலைநகர் கொழும்பிற்குள் ஊடுருவி இருப்பதாகவும் அண்மைக் காலத்தில் குற்றச் செயல்கள் அதிகரித்திருப்பதாகவும் தகவல் வெளியாகியதை அடுத்தே பொலிஸார் தேடுதலில் ஈடுபட்டுள்ளதாக தெரியவருகிறது.

இதேவேளை, வெள்ளவத்தைப் பகுதியில் நேற்று முன் தினம் காலை படையினர் பாரிய சுற்றிவளைப்பு தேடுதலை மேற்கொண்டுள்ளனர். இதன் போது நூற்றுக்கும் அதிகமான இளைஞர்கள் கைது செய்யப்பட்டமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கது. (தி)

## முஸ்லிம்கள்..

நிர்வாக சபை உருவாக்கப்பட்ட பின்னர், கடந்த காலங்களில் ஏற்பட்ட அனுபவங்களை மீண்டுமொரு முறை சந்திக்க நாம் தயாரில்லை.

இந்நிலைமையில் இடைக் கால நிர்வாக சபை இனப் பிரச்சினைக்கான இறுதித் தீர்வு மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படும் போது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனித்தரப்பாக அதில் பங்கு பற்றுவதற்கு அளிக்கப்பட்ட உத்தரவாதம் நிறைவேற்றப்பட வேண்டும் என்று அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளது. (இ)

## ஸ்ரீ.சு.கட்சி...

அடுத்த மாதம் 8-ம் திகதி கூட்டமைப்பு ஒப்பந்தம் கைச்சாத்தான பின் கொள்கைத் திட்டம் ஒன்றைப் பிரகடனம் செய்வதுடன் கூட்டறிக்கை ஒன்றையும் வெளியிடவுள்ளனர். இதற்கிடையில் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை மீண்டும் கூடி இறுதி முடிவுகளை எடுப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (வ-தி)

## புரிந்துணர்வு...

தனது கருத்துக்களையும் சிபார... களையும்,முடிவுகளையும் ... காட்டியுள்ளது.

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினால் பத்தி... க்கு அனுப்பி வைச்... விசாரணை அறிக்கையி... தெரிவிக்கப்பட்டுள்ளதா...

முல்லைத்தீவுக் கடற்... இலங்கை கடற்படையினரா... தலைப் புலிகளின் கப்பல் ... அழிக்கப்பட்ட சம்பவமா... அரசும் விடுதலைப் புலிக... செய்து கொண்ட யுத்த நி... உடன்படிக்கையை இலங்... கடற்படை மீறவில்லை எ... தெளிவுபடுத்தியுள்ளது. எ... னில் தாக்கி அழிக்கப்பட்ட ... பலின் அடையாளத்தைக் க... டக் கூடிய வகையில் எந்தவ... மான கொடிகளும் பறக்க விட... படவில்லை.

இச் செய்கையானது ... ஆண்டு டிசம்பர் மாதம் ... திகதி பிரகடனம் செய்ய... கடல் சட்டத்தை விடுதலைப் புலிகள் மீறியுள்ளமையை எடு... காட்டுகிறது. இச் சட்டத்தி... காரம் இலங்கைக் கடற்ப... னது விடுதலைப் புலிகளின் ... பலைச் சோதனையிடக் ... அதிகாரத்தைக் கொண்டுள்... எனவே இச் சட்டத்தை விடுதலை... புலிகள் கவனத்தில் எடு... கடல்சட்டத்தை அனுசரி... நடக்குமாறு தனது வர்த்... கப்பல்களின் மாலுமிகளு... புலிகள் அறிவுறுத்த வேண்...

கடற் பிரதேசத்தில் இல... கடற்படையினருக்கும் விடு... புலிகளுக்கும் மோதல்கள ... படக் கூடிய நிலைமைகள் ... பட்டால் அது தொடர்பாக ... சாராரும் யுத்த நிறுத்தக் கண்... காணிப்புக் குழுவுக்கு அறிவி... வேண்டும். ஆனால் இத் தாக்... தல் சம்பவம் தொடர்பாக ... தரப்பினரும் உரிய நே... கண்காணிப்புக் குழுவுக்கு ... விக்கவில்லை. அதேவேளை ... தேகத்திற்கிடமான கப்பல்க... நடமாடும் போது அவற்றைப் ... சோதனைக்கு முன்னர் அழிக்... கூடாதென்றும் இலங்கை ... படைக்கு கண்காணிப்புக் கு... அறிவுறுத்தியுள்ளது.

கப்பல் தாக்கி அழிக்கப்ப... சம்பவம் முல்லைத்தீவு சர்வதேச... கடற்பரப்பில் இருந்து 266 கடல் மைல் தொலைவில் நடைபெற்... தாக விடுதலைப் புலிகள் தெ... வித்துள்ள போதும், இச்சம்பவம் முல்லைத்தீவின் வடக்கு கிழக்கு கடற்பரப்பில் இருந்து 175 கடல் மைலுக்கு அப்பால் உள்ள பொருளாதார மையத்துக்குள் இடம் பெற்றதாக கடற்படையினர் கூறியுள்ளதாகவும்,அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள...

அழிக்கப்பட்ட விடுதலை... புலிகளின் கப்பலில் பணிபுரி... பணியாளர்களிடம், இலங்... கடற்படையினர் தொடர்பு கொண்டு உரையாடிய போது உரிய தகவல்கள் எதுவும் கடற்படையினருக்கு அவர்களால் வழங்கப்படவில்லை என்றும்,இதனைய... கடற்படையினர் விடுதலைப் ... களின் கப்பலை நோக்கி ... தாகவும் சுமார் 40 நிமிட... ளுக்குப் பின்னர் புலிகளின் ... பல் சத்தத்துடன் வெடித்த... கவும் அப்போது அக்கப்ப... இணைக்கப்பட்டிருந்த சிறிய ப... சம்பவம் நடைபெற்றஇடத்தில் இருந்த தப்பிச் சென்றதாகவும் கண்காணிப்புக்குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் புலிகளின் கப்பலில் இருந்தவர்களுக்கு என்ன நேர்ந்தது என்று தமக்குத் தெரியவில்லை எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ம)


MEDICAL CHECK UP

வைத்திய பரிசோதனை

நோய் வருமுன் காப்போம்
திடீர் மரணத்தைத் தவிர்ப்போம்

- 40 வயதிற்கு மேற்பட்ட நோய் உள்ள, நோய் அற்ற அனைவரும் இந்த MEDICAL CHECK UP ஐச் செய்வதன் மூலம் நோயற்ற சுகவாழ்வு வாழலாம்
- X-RAY- ECG, சில முக்கிய இரத்தப் பரிசோதனைகள் சிறுநீர்ப் பரிசோதனை.

இலவச வைத்திய ஆலோசனையுடன் கூடிய MEDICAL CHECK UP குறைந்த கட்டணத்தில்! விபரங்களுக்கு நேரில்!

போக்குவரத்து வசதி கருதி

சம்பந்தர் மொடேர்ன் கிளினிக்

(அமுல் கிறீம் ஹவுஸ் அருகில்)
ஆஸ்பததிரி வீதி, யாழப்பாணம்.



மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த லண்டனில் பணிபுரியும் விசாக நட்சத்திரமும் 1972இல் பிறந்த,லண்டன் பிரஜாவுரிமையுள்ள மணமகனுக்கு-அழகிய 5 அடி உயரமுள்ள மணமகள் தேவை. சாதகக் குறிப்பு-புகைப்படம் மற்றும் விவரங்களுடன் நேரில் அல்லது தபால் மூலம தொடர்பு கொள்ளுங்கள்.

கிருஷ்ணமூர்த்தி
114/19,நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
போன் 2789
(7199)



THE ROYAL COLLEGE OF JAFFNA

ஆங்கிலத்தில் கதைக்கப் பயில

விக்னேஸ்வரன் ஆச்சாரி
DIPLOMA IN ENGLISH,Dip/CER IN Med.Labo.SCIENCE (LONDON)

426(302)காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.பிளாக் வீதி,சங்கானை



மலிவு விற்பனை! மலிவு விற்பனை! மலிவு விற்பனை! மலிவு விற்பனை! மலிவு விற்பனை!

யாழ்.நகரில் மாபெரும் புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும்

யாழ்.பல்கலைக்கழக வணிக மாணவர் மன்றம்,தலைநகரில் தனித்துவமான புத்தக நிலையமாகத் திகழும் ஜெயா புத்தக நிலையத்தின் (Jeya Book Centre) ஆதரவுடன் நடாத்தும் மாபெரும் புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும்.

காலம்: 2003 ஜுலை 15 முதல் 30 வரை.
நேரம்: தினமும் காலை 9.00 முதல் மாலை 6.00மணி வரை(புதிய நேரம்)
இடம்: யாழ்ப்பாணப் பல்கலைக் கழக நூல் நிலைய மண்டபம்

★ பாலர் முதல் பல்கலைக் கழக மாணவர்க்கான பாட,பயிற்சிப் புத்தகங்கள்.
★ பல்கலைக் கழக மாணவர்களுக்கான மருத்துவ,விஞ்ஞான,கணித,பொறியியல்,கலை, விஞ்ஞான,வணிக நூல்கள்
★ கணனிக் கல்வி தொடர்பான நவீன நூல்கள்
★ சிறுவர் இலக்கியங்கள்
★ நாவல்கள்,சிறுகதைகள்,கவிதைத் தொகுதிகள்
★ அகராதிகள்(தமிழ்,ஆங்கில மொழிகளில்)
★ ஜோதிட நூல்கள்
★ சமையற்கலை நூல்கள்.
★ ஆங்கில இலக்கிய நூல்கள்
★ தரமான அப்பியாசக் கொப்பிகள் (மலிவு விலையில்)
★ தரமானC.R புத்தகங்கள்(மலிவு விலையில்)

விரும்பிய யாவற்றையும் ஒரே இடத்தில்,ஒரே நாளில் பெறக்கூடிய அரியவாய்ப்பு!
சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள்!!

நூல்களுக்கான விசேட கழிவுடன் கூடிய விலை விபரம்:

| | |
|---|---|
| இலங்கை நூல்களுக்கு | ஆகக் கூடிய சில்லறை விலையில் 10% கழிவு |
| இந்திய வெளியீடுகளுக்கு | 1 இந்திய ரூபாய் 2.75 வீதப்படி |
| இங்கிலாந்து வெளியீடுகளுக்கு | 1UK£-165/- வீதப்படி |
| அமெரிக்க வெளியீடுகளுக்கு | 1US $ -110/- வீதப்படி |
| சிங்கப்பூர் வெளியீடுகளுக்கு | 1S $ -75/- வீதப்படி |

முக்கிய குறிப்பு:

பாடசாலைகள்,பல்கலைக் கழகம்,பொது நிறுவனங்கள்,பிரதேச சபை நூலகங்கள்,சனசமூக நிலையங்கள்,தனியார் கல்வி நிறுவனங்கள் என்பன புத்தகங்களைக் கொள்வனவு செய்யுமிடத்து குறித்த விலையில் 10% கழிவு கொடுக்கப்படும்.புத்தக விற்பனையாளர்கள் மொத்தமாகக் கொள்வனவு செய்யுமிடத்து விஷேட கழிவு வழங்கப்படும்.

நிறுவனங்களுக்கூடான புதியஓடர்களும் ஏற்கப்பட்டு விநியோகம் செய்யப்படும்.

யாழ்.எழுத்தாளர்கள் தங்களது படைப்புக்களை கண்காட்சியில் வைக்கவிரும்பினால் 13,14 ஆம் திகதிகளில் கண்காட்சி மண்டபத்திற்கு நேரடியாக வருகை தரவும்.

வாருங்கள்! அலை கடலெனத் திகழும் புத்தக வகைகளைப் பாருங்கள்!
விரும்பியதை வாங்குங்கள்! அரிய வாய்ப்பைத் தவற விடாதீர்கள்!
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

[C/6367]

-வணிக மாணவர் மன்றம்,யாழ்.பல்கலைக் கழகம்.
-JEYA BOOK CENTRE, 91-99,People's Park Complex,Colombo-11.



பௌதிகவியல் இணைந்த கணிதம்

பல வருட அனுபவம் பெற்ற ஆசிரியரினால் முழுப்பாடத் திட்டமும் சிறப்பாக மிகக் குறுகிய காலத்தில் முடித்துக் கொடுக்கப்படும்.20 வருட வினாத்தாள் உட்பட தனிப்பட்ட முறையிலும் கற்பிக்கப்படும். தொடர்பு தினசரி 3மணிக்குப் பின்பு

R.பாலசுப்பிரமணியம. B.Sc(cey) Dip in Ed
17/1 பிறவுண் வீதி.
யாழ்ப்பாணம். (7210)


இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.06.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.